விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram
WESTERN UNION WU
Ria
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-737)

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 12 வெள்ளிக்கிழமை (27.11.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 344

### தமிழர்களின் விடிவுக்காக களமாடி மாய்ந்த

# மாவீரர்களின் நாள் இன்று



கோப்புப் படம்

## தமிழ் மக்கள் தத்தமது வீடுகளில் ஈகைச்சுடர் ஏற்றி அஞ்சலிப்பர்

(யாழ்ப்பாணம்)

தமிழ் இனத்தின் விடிவுக்காக களமாடி மாய்ந்த வீரமறவர்களை நினைவுகூரும் மாவீரர் நாள் இன்றாகும்.

சந்தனபேழைகளில் உறங்கும் மாவீரர்களை நினைவுகூர்ந்து இன்று மாலை 6.07 மணியளவில் தாயகத்தில் தமிழ் மக்கள் தத்தமது வீடுகளில் ஈகைச்சுடர்களை ஏற்றி அஞ்சலிப்பர்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## சூரியனாய் மிளிர்ந்தவர் பிரபாகரன்



தலைவருக்கான வாழ்த்துச் செய்தியில் சீமான்

3ஆம் பக்கம் பார்க்க

### இலங்கைப் பாராளுமன்றத்தில்

## பிரபாகரனுக்கு பிறந்தநாள் வாழ்த்து

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு நேற்றைய தினம் பாராளுமன்றில் பிறந்த நாள் வாழ்த்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனே இந்த பிறந்த நாள் வாழ்த்தைத் தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் நேற்றையதினம் கலந்து கொண்டு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் இந்த வாழ்த்தை தெரிவித்தார்.

அத்துடன் மகாவலி 19

## மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழர் தாயகத்தில் வீதி எங்கும் இராணுவம், பொலிஸ் குவிப்பு

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாள் நினைவேந்தலையொட்டி தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் வழமைக்கு மாறாகப் பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

மூலைமுடுக்கெல்லாம் அரச படைகளின் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கிலுள்ள 8 மாவட்டங்களிலும் இன்று மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளைப் பொதுவெளியில் நடத்த அந்தந்த மாவட்ட நீதிமன்றங்களினால் தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸாரின் வேண்டுகோளின் பிரகாரம் இந்தக் கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் வடக்கு, கிழக்கில் பொலிஸாரினதும் இராணுவத்தினரினதும் பிரசன்னம் அதிகரித் 19

## நினைவேந்தலுக்கு பருத்தித்துறை நீதிமன்றம் தடை!

(கரணவாய்)

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மக்கள் ஒன்று கூடுவதால் ஆபத்து ஏற்படும் எனபதால்மாவீரர நாள் நினைவேந் தலை 19

### தமிழர்களின் புனித நாளான மாவீரர் நாளை

# மனித உணர்வுகளோடு அகக் கண்களால் பாருங்கள்

### சபையில் சிறீதரன் எம்.பி

19ஆம் பக்கம் பார்க்க

### வவுனியா செட்டிகுளத்தில்

## மின்சாரம் தாக்கியதில் இளைஞன் உயிரிழப்பு



(வவுனியா)

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் தோட்டத்திற்கு பொருத்தப்பட்டிருந்த மின்சாரம் தாக்கியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 19

## இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால் இன்று இலங்கை விஜயம்

(கொழும்பு)

இலங்கை, இந்தியா மற்றும் மாலைதீவுகளுக்கு இடையிலான முத்தரப்புப் பேச்சுவார்த்தையில் பங்கேற்பதற்காக, இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால், இன்று இலங்கைக்கு வருகை 19

### பருத்தித்துறையில்

## அதிக மழை

(குப்பிழான்)

நேற்று முன்தினம் புதன் கிழமை காலை 8.30 மணியிலிருந்து நேற்று வியாழக் கிழமை காலை 8.30 மணி வரையான 24 மணத்தியாலத்தில 19

## சதத்தை அண்மித்த கொரோனா பலி

### நேற்றும் +553 பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் கோவிட் - 19 நோயால் மேலும் 5 பேர் உயிரிழந்துள்ளனர் என்று இரவு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் நாட் 19

## மணமகள் தேவை

1978 ஆம் ஆண்டு விசாக நட்சத்திரம்
1ஆம் பாதத்தில் ( உதயத்தில் செவ்வாய் ) பிறந்த
அரச உத்தியோகம் பார்க்கும் இந்து கௌரவ
குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு
மணமகள் தேவை.

(C-784)

**தொடர்பு : 077 460 9400**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




செல்வன்
**சந்திரகுமார் ஜதிசன்**

யா/ நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை
வித்தியாலயத்தில் கல்வி கற்று 2020 ஆம்
ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில்
தோற்றி 165 புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்த
செல்வன் சந்திரகுமார் ஜதிசன் அவர்களை
பாராட்டி வாழ்த்துவதோடு
கற்பித்த அதிபர், ஆசிரியர்களையும்
மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

செல்வன்
ச. ஜதிசன்
(165)

(4773)

வாழ்த்துவோர் :
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.
திரு. ஆ.கு. ஆறுமுகநாதன்
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர் **தேவராஜா ஜெயதீபன்**
அவர்களின் அன்பு மாமியார்
**அமரர்**
**தவமணி சுப்பிரமணியம்**




அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(4771)

**ஆசிரிய நலன்புரிக் கழகம்**
**யா / கொக்குவில் இந்துக் கல்லூரி**

# மரண அறிவித்தல்

மலர்வு
29 – 04 – 1945



உதிர்வு
26 – 11 – 2020

# செல்லர் சின்னராசா
## ( ஓய்வு பெற்ற கணக்காய்வாளர் )

யாழ்ப்பாணம், கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் தென்புலோலி சிங்கை நகரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் சின்னராசா நேற்று (26.11.2020) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லர் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நடேசு, இராசலட்சுமி, சின்னக்கிளி, தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற V.K மாணிக்கம், V.K சின்னராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் யசோதரன் (சுவிஸ்), யசோதரா, சியாமினி (ஜெனி - பிரான்ஸ்), சுபதரன் (கொலின் - கட்டார் ), மிஸ்சியானா (அஜி - UK) ஆகியோரின் அன்புத் தந்தையும் கெமேந்தினி, பீற்றர் ஆகியோரின் அன்பு மாமனாரும் ராம்சியாஸ், நிகாசினி அபிநாஸ், அங்கதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (27.11.2020) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-783)

சிங்கை நகர்,
புலோலி தெற்கு, புலோலி.

தகவல்:-
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி சுகந்தி யோகராஜன் அவர்களின் அன்புத் தாயார்
**அமரர்**
**கமலாதேவி சிவபாததுரை**

அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(4772)

**ஆசிரிய நலன்புரிக் கழகம்**
**யா / கொக்குவில் இந்துக் கல்லூரி**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

அலுவலக வாகனங்களை செலுத்துவதற்கான அழைப்பின் பேரில்
( On - Call ) சாரதிகளை பதிவு செய்து பணிக்கமர்த்துதல்
தொடர்பான கேள்வி விண்ணப்பம்

1.தவிசாளர், கொள்வனவுக் குழு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களால் அலுவலக மற்றும் கல்விசார் செயற்பாடுகளை செவ்வனே நிறைவேற்றுவதற்காக அழைப்பின்பேரில் வாகனங்களை செலுத்துவதற்கான சாரதிகளை (On-call Drivers) பதிவுசெய்து பணிக்கு அழைப்பதற்கான விண்ணப்பங்கள் தகுதிவாய்ந்த தனி நபர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

| இல. | பணியிடம் | சாரதிகள் | சாரதி அனுமதிப் பத்திரம் வாகன வகை |
|---|---|---|---|
| 01 | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி | 03 | வான், பஸ், பிக்கப், கார் முச்சக்கரவண்டி, உழவு இயந்திரம், சிறியவகை வாகனங்கள், கை உழவு இயந்திரம் மற்றும் கனரக வாகனங்கள் |
| 02 | அறிவியல் நகர், கிளிநொச்சி | 06 | |
| 03 | ஒருங்கிணைந்த பண்ணை, புளியங்குளம் | 01 | |

2.விண்ணப்பிக்க தகுதியுடைய தனிநபர்களிடமிருந்து பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக கேள்வி விண்ணப்பங்களை டிசம்பர் 11ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் சமர்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

3.சேவைக்கால ஒப்பந்தம் ஒரு (01) வருடத்தினையும் செயற்றிறன் மதிப்பீட்டுக் காலம் நாற்பத்து ஐந்து (45) நாட்களையும் கொண்டிருக்கும்.

4.விண்ணப்பதாரர் பின்வரும் அடிப்படைத் தகைமைகளை பூர்த்திசெய்தல் அவசியமானது. அத்துடன் அவற்றினை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் பிரதி (Copy) உறுதிப்படுத்தலுடன் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

- இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- இலங்கை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் காலத்தையுடைய சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
- கல்வித்தகைமை ஆகக்குறைந்தது தரம் 08 இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் நன்கு எழுத, வாசிக்கவும் தெரிந்திருத்தல் வேண்டும்.
- வயதெல்லை 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 45 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
- உழவு இயந்திரங்கள், சுழல்கலப்பை மற்றும் பெட்டி என்பவற்றின் இணைப்புடன் செலுத்துவதற்குரிய தொழிற்தகைமையைக் கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.
- பூரண உடல் ஆரோக்கியத்தினை மருத்துவப் பரிசோதனைச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.
- சாரதிகள் குறைந்தது 10 வருட அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும். அத்துடன் மூன்று (03) வருடத்திற்கு மேற்பட்ட காலம் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றியிருத்தல் வேண்டும்.
- கடந்த மூன்று வருடங்களில் வீதி விபத்துக்களை சந்திக்காதவராக இருத்தல் வேண்டும்.

5. முழுமையான விண்ணப்பப் பத்திரத்தை தமிழ் மொழியில் கொள்வனவு செய்வதற்கு சேவைக் கட்டண வைப்புப் பணமாக ரூபா 200.00 இனை 07.12.2020ஆம் திகதிக்கு முன்னர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் மக்கள் வங்கிக் கணக்கிலக்கம் 162100160000880 இற்கு வைப்புச் செய்தல் வேண்டும் அல்லது பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பித்து பிரதிப் பதிவாளர் பொதுநிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளமுடியும். மேலும் முழுமையாக பூரணப் படுத்தப்படாத விண்ணப்பங்களும் மற்றும் காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

6. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் மூலப்பிரதி (Original), பொதியிட்டு அக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அழைப்பின் பேரில் (On-call) சாரதிகளை பதிவு செய்தல் - 2021" எனத் தலைப்பிட்டு தவிசாளர், கேள்விச்சபை, யாழப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களிடம் 11.12.2020ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது தவிசாளர், கேள்விச் சபை, த.பெ.இ.- 57, திருநெல்வேலி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 11.12.2020ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**மேலதிக தகவல்களுக்கு பிரதிப் பதிவாளர் பொது நிர்வாக கிளை -**
**Tele: 021 222 6517, Fax:- 021 222 6517.**

**தவிசாளர்**
**கேள்விச் சபை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**


(C-781)

- வேலெடுத்து முருகன் வதம் செய்தான் சூரனை
- வாளெடுத்து சோழன் புலிக்கொடி நாட்டினான்

# அறவழி நின்று மறம் போற்றி வாழ்ந்து


# சூரியனாய் மிளிர்ந்தான் பிரபாகரன்

## சீறிய செந்தமிழன் சீமான்



**(சென்னை)**

**தமிழ்த் தேசிய இனத்தின் ஆன்ம விருப்பமான தமிழ்த் தேசத்தைப் படைத்திட, தலைவர் உதித்த திருநாளில் ஒவ்வொரு தமிழரும் உறுதியேற்போம் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.**



விடுதலைப்புலிகளின் தலைவரின் பிறந்த தின வாழ்த்துச் செய்தியிலேயே இதனை சுட்டிக்காட்டியுள்ளார். குறித்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இன்றைய நாள் வரலாற்றின் வீதிகளில் தாழ்ந்து வீழ்ந்து கிடந்த தமிழர் என்ற தேசிய இனம் தன்னைத் தானே தலை உயர்த்தி நிமிர்ந்து பார்க்கின்ற புனித நாள்.

அழித்தொழிக்கப்பட்ட அடிமைத் தேசிய இனமாக உலக வீதிகளில் நாம் அலைந்தாலும் நமது உள்ளத்துக்குள் எரிகின்ற விடுதலை நெருப்பு இன்னும் அணையாமல் இருப்பதற்கான 'ஒற்றைப் பெயர்' பிறந்த நன்னாள்.

இந்த உலகில் வாழ்கின்ற ஒவ்வொரு தேசிய இனமும் தனது மொழி, நிலம், உரிமைகள், பண்பாட்டு விழுமியங்கள், தேசிய இனத்தின் இறையாண்மை ஆகியவற்றைக் காப்பாற்ற போராடி வருகிற பெரும் கதையே உலக வரலாறாக அறியப்படுகிறது.

கல் தோன்றி மண் தோன்றா காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்தக் குடி எனப் போற்றப்படுகின்ற தமிழர் என்கின்ற தேசிய இனமும் பன்னெடுங் காலமாக தனது மொழி, நிலம், பண்பாட்டு அடையாளங்களைக் காப்பாற்றுவதற்கு போராடிவருகிறது.

காலம் காலமாக உயிரைத் துச்சமாகக் கருதி, மானத்தையும், வீரத்தையும் உயிராகக் கருதி களத்தில் நின்ற பெருமாவீரர்கள் தான் தமிழ்த் தேசிய இனத்தின் தெய்வங்களாக, இறை வடிவங்களாக மாறி இருக்கிறார்கள்.

வரலாற்றுப் பெருமிதங்கள் நிறைந்த தமிழர் வரலாற்றில் நேர் - எதிர் நின்று எதிரிகளை நோக்கி மாபெரும் வீரத்துடன் வேலெடுத்து பாய்ந்த முருகன், வாளெடுத்து சுழன்று திசை எட்டும் புலிக்கொடி பறக்க வைத்த சோழன் என காலப் பெருமையின் நீண்டு துலங்கும் பட்டியலில் அறம் வழி நின்று மறம் போற்றி வாழ்ந்து, தன் பெயரை தங்க எழுத்துக்களால் பொறித்து தனித்துவம் கண்ட தலைவராக மிளிர்ந்து சுடர்கிற சூரியனாய் விளங்குபவர் தான் நமதுயிர் தலைவர், அன்பு அண்ணன் வே.பிரபாகரன்.

இந்த உலகில் வாழ்கின்ற 12 கோடி தேசிய இன மக்களைக் கொண்ட தமிழினத்தின் இருபெரும் தாய் நிலங்களாக தாயகத்தமிழகமும், தமிழீழமும் இருந்து வருகின்றன. நடுவே பாய்ந்து பூரிக்கின்ற கடலலைகள் இரு பெரும் நிலங்களையும் பிரித்தாலும் குருதி முழுவதும் நிறைந்திருக்கின்ற மரபணுக்களின் ஒத்திசைவு உணர்வால், ஒரு தாயின் வயிற்றில் தோன்றிய ஒரே கருவறைப் பிள்ளைகள் என்கின்ற உறவால் ஒற்றைத் தேசிய இனத்தின் மக்களாக தமிழராகிய நாங்கள் வாழ்கின்றோம்.

நீண்ட நெடிய வரலாற்றுத் தொடர்ச்சி, எக்காலம் தோன்றியது என அறிய முடியாத அளவுக்கு இலக்கண, இலக்கிய செழுமைகளுடன் கூடிய மொழி முதுமை போன்ற பெரும் சிறப்புகள் தமிழினத்திற்கு இருந்தாலும் இறையாண்மையுடன் கூடிய ஒரு நாடு இல்லையே என்ற ஏக்கம் ஒவ்வொரு தமிழ் மகனின் மனதிற்குள்ளும் ஆழ் மனத்துக்கமாக பன்னெடுங் காலமாக இருந்து வந்தது.

சிங்களப்பேரினவாத கரங்களுக்குள் நம் தாய் நாடு சிக்கித் தவித்த போது இதை மீட்க யாராவது எங்கிருந்தும் வர மாட்டார்களா? என்கிற தவிப்பு நம்மிடையே இருந்து வந்தது.

நம் மனதிற்குள் இருந்த அந்தத் துக்கத்தைத் துடைத்தெறிவதற்காக, ஏங்கித் தவித்த ஏக்கத்தை அழித்து முடிப்பதற்காக காலம் அளித்த கரிகாலனாக நம்மிடையே தோன்றி, சமகாலத்தில் தமிழர் என்ற தேசிய இனத்திற்கு முகமாக, முகவரியாக , ஊக்கமாக, ஆற்றலாக அடையாளமாக திகழ்பவர் தான் நம் தேசியத் தலைவர்.

தனது அறநெறிப் போற்றி வாழ்ந்த வாழ்க்கை முறையினால், ஓங்கி உயர்ந்த ஒழு ங்கு நடவடிக்கைகளால் இது வரை தோன்றிய புரட்சியாளர்களில் நம் தலைவர் அண்ணன் பிரபாகரன் சிறந்தவராகிறார்.

"படையின் எண்ணிக்கையில் வெற்றியல்ல; எண்ணத்தில் தான் வெற்றி" என்பதைப் பாருக்கு எடுத்துச் சொன்னதோடு மட்டுமல்லாமல் அதை நடைமுறைப்படுத்தி வரலாற்றில் வீரக்காவியமாக மாற்றி நிறுத்தியதும் தலைவர் பிரபாகரன் மட்டும் தான்.

ஒரு மக்களின் தலைவனின் வாழ்க்கை எவ்வாறு அமையவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாய் அவர் விளங்கினார். மக்களோடு மக்களாக எளிய வாழ்க்கை வாழ்ந்து இறுதிவரை மக்களின் விடுதலைக்காகக் களத்திலே நின்று, எதிர்த்து நின்ற எதிரியைக்கூட உளப்பூர்வமாக வென்று காட்டியவர்தான் நம் தலைவர் பிரபாகரன்.

மது, புகை ஊழலற்ற, பாதுகாப்பான, மக்கள் நலன் பேணுகின்ற, மொழி பண்பாட்டு அடையாளங்களை பாதுகாக்கிற , சுற்றுப்புறச் சூழலியல் கருத்துக்களை உள்ளடக்கிய தாய்மைப் பொருளாதாரத்தைப் போற்றி வளர்த்த ஒரு பொதுமை அரசாக தலைவர் பிரபாகரன் கட்டியெழுப்பினார்.

அவர் கனவுப் பூமியாய் கட்டமைத்த நம் தேசத்தை உலக வல்லாதிக்கங்களின் துணையோடு சிங்களப் பேரினவாதம் இன்று அடிமை பூமியாக மாற்றி வைத்திருக்கிறது.

வரலாறு காணாத தடை செய்யப்பட்ட ஆயுதங்களை வைத்து, உலக நாடுகளின் துணைகொண்டு நமது விடுதலைப்போராட்டத்தை சிங்கள அரசு தற்காலிகமாக முறியடித்து வைத்திருக்கிறது. போர் முடிந்து 10 ஆண்டுகளுக்கு மேலாகியும் உலக அரங்கில் நமக்கென நீதி இன்றும் கிடைக்கவில்லை.

இவ்வுலகில் எல்லாத் தேசிய இனங்களையும் போல நமக்கும் சகலவிதமான உரிமையுடன் வாழக்கூடிய இறையாண்மை மிக்க ஒரு தேசம் இன்றளவும் அமையவில்லை. நம் உயிர் தலைவர் வே.பிரபாகரனின் கரங்களில் இருந்த விடுதலைப் போராட்டம் இன்று உலகத் தமிழர்களின் தோள்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

எது நடந்தாலும் என்ன நிகழ்ந்தாலும் நாட்டிற்கான விடுதலைப் போராட்டத்தை எந்த சூழ்நிலையிலும் கைவிடாமல் தொடர்ந்து எடுத்துச் செல்வதுதான் நம்முயிர் தலைவர் மீதான நமது ஆழ்ந்த பற்றுறுதியை இவ்வுலகிற்கு எடுத்துக்காட்டுகிற உன்னதப்பணி என்பதை இப்புனித நாளில் உணர வேண்டும்.

மன உறுதி குலையாமல், விடுதலை நோக்கம் சிதையாமல் தமிழினம் தனது விடுதலைப் பாதையில் தொடர்ந்து முன்னேற வேண்டும் என்பது தான் நம் தலைவர் பிறந்த நாளில் நாம் எடுத்துக் கொள்ளும் ஆணையாக அமைகிறது.

உலகம் முழுக்க வாழ்கின்ற எம் தாய்த்தமிழ் உறவுகளுக்கு தலைவர் என்னுயிர் அண்ணன் வே. பிரபாகரனின் 66 ஆவது அகவை தினத்தில் தமிழர் எழுச்சி நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன் என சீமானின் பேச்சு அனல் கக்கியது. (ஙி-4-7)

# பூநகரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ.து) பூநகரி

**பதவி வெற்றிடங்கள்:-** வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரல்

குறித்த எமது பூநகரி ப.நோ.கூ.சங்கத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு தகைமை உடையவர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பதவி :- உள்ளக கணக்காய்வாளர் (கு.இ 105/10)**
**சம்பள அளவுத்திட்டம்:-** 17605-198X10-220X10 = 21785.00
(சு.நி 04/2018ன் படி)

**தகைமைகள்:-**

அ.கூட்டுறவு பணியாளர் 11 ஆவது சம்பளத்திட்ட கணக்குப் பதிவியலாளர் அல்லது கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான எழுதுநர் பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12 ஆவது சம்பளத்திட்ட கணக்கு பதிவியலாளர் அல்லது கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான எழுதுவினைஞர் பதவியொன்றில் ஆறு (6) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**அல்லது**

ஆ. ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவியலாளர் நிறுவன இறுதியாண்டு பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய கணக்குப் பதிவியலாளர் நிறுவன இடைநிலைப் பரீட்சையுடன் கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**அல்லது**

இ.கூட்டுறவு பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) கணக்கியல் உட்பட (03) பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

2. **பதவி :- எழுதுநர் (கு.இ - 302/14)**
**சம்பள அளவுத்திட்டம்:-** 15960-135X10-145X10=18760.00
(சு.நி 04/2018 ன் படி)
**தகைமைகள்:-**

அ. கூட்டுறவு பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவி ஒன்றில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு கணியாளர் 16 ஆவது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவி ஒன்றில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

ஆ. க.பொ.த (சா.தரம்) கணித அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்கள அல்லது தமிழ்மொழி உட்பட 5 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

3. **பதவி:- களஞ்சிய மேற்பார்வையாளர் (கு.இ- 207/11)**
**சம்பள அளவுத்திட்டம்:-** 17190-170X10-185X10=20740.00
(சு.நி 04/2018ன் படி)
**தகைமைகள்:-**

அ.கூட்டுறவு பணியாளர் 12 ஆவது சம்பளத்திட்ட களஞ்சிய பொறுப்பாளர் அல்லது கொள்வனவு உத்தியோகத்தர் அல்லது சில்லறை களஞ்சிய மேற்பார்வையாளர் அல்லது சில்லறை களஞ்சிய முகாமையாளர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 13 ஆவது சம்பள திட்ட அப்படிப்பட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**அல்லது**

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம்-அல்லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் களஞ்சிய பொறுப்பு அல்லது வழங்கல்கள் அல்லது களஞ்சிய முகாமை அல்லது சந்தைப்படுத்தல் என்பவற்றுடன் தொடர்புடைய பாடநெறியொன்றை வெற்றிகரமாக பயின்றிருத்தல்.

**அல்லது**

இ. அங்கீகரிப்பட்ட நிறுவனமொன்றில் வழங்கல்கள் அல்லது களஞ்சிய முகாமை அல்லது சந்தைப்படுத்தல் பற்றிய டிப்ளோமாவுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றில் களஞ்சிய பொறுப்பாளர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**அல்லது**

ஈ. கூட்டுறவு பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவன மொன்றில் களஞ்சிய பொறுப்பாளர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

4. **பதவி: சாரதி (கு.இ) 312/13**
**சம்பள அளவுத்திட்டம்:** 16365-140X10-150X10=19265.00
(சு.நி 04/2018 ன் படி)
**தகைமைகள்:**

அ. 5 ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழும். பஸ் அல்லது லொறி அல்லது இழுவைப் பெட்டியுடன் உழவியந்திர சாரதி அனுமதிப்பத்திரத்துடன் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

5. **பதவி:- சாரதி (கு.இ) 312/14**
**சம்பள அளவுத்திட்டம்:** 15960-135X10-145X10=18760.00
(சு.நி 04/2018ன் படி)
**தகைமைகள்:**

அ.5 ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழும். கார் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

6. **பதவி:- விற்பனை உதவியாளர் கு.இல - 308/ 17**
**சம்பள அளவுத்திட்டம் :-** 14725-115X10-130X10=17175.00
(சு.நி 04/2018ன் படி)
**தகைமைகள்:**

அ.கூட்டுறவு பணியாளர் கனிஷ்ட தர சான்றிதழ்

**அல்லது**

ஆ.8 ஆம் வகுப்பு சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக 3 வருடங்களிற்கு குறையாத அனுபவம்
வயது எல்லை -18-45 (சங்கப்பணியாளருக்கு இவ்வயதெல்லை பொருந்தாது).
விண்ணப்ப முடிவுத்திகதி 10.12.2020 வரையாகும்.

**ஏனையவை விபரங்கள்:-**


- இப்பதவிகளுக்கு அடிப்படை சம்பளத்திட்டங்களுக்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்களுக்கு அமைய இதர படிவங்களும் காலத்திற்குக்காலம் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
- குறித்த பதவிகளுக்கு தெரிவாகும் விண்ணப்பதாரிகள் சங்கத்தினால் கோரப்படும் பிணையினை செலுத்த வேண்டும்.
- சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி கல்வித்தகைமை சான்றிதழ். வேலைத்தகைமை சான்றிதழ். ஏனைய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியினை இணைத்து தலைவர் பூநகரி. பல நோ.கூ.சங்கம். பூநகரி என்னும் முகவரிக்கு தபால் மூலமோ அல்லது நேரிலோ 10.12.2020 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டும். ஏற்கனவே கூட்டுறவு சங்கம் ஒன்றில் கடமையாற்றும் ஊழியர்கள் அச்சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.

(சி-780)

**தா.அரியரத்தினம் , தலைவர்**
**பூநகரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் பூநகரி.**

## சமல்ராஜபக்ஷ ,சரத்வீரசேகர அமைச்சுப் பதவிப் பிரமாணம்





(கொழும்பு)

சமல் ராஜபக்ஷ மற்றும் சரத் வீரசேகர ஆகியோர் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் அமைச்சுப் பதவிப் பிரமாணங்களை மேற்கொண்டுள்ளனர்.

அந்த வகையில் உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சராக சமல் ராஜபக்ஷ பதவிப் பிரமாணம் மேற்கொண்டார்.

அதேநேரம் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர்ரியர் அட்மிரல் சரத் வீரசேகர பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

பொலிஸ் திணைக்களம், சிவில் பாதுகாப்பு படை மற்றும் பொதுப் பாதுகாப்பு தொடர்பான ஒரு சில நிறுவனங்கள் முன்னதாகவே இந்த அமைச்சகத்தின் கீழ் வர்த்தமானி செய்யப்பட்டுள்ளன. (ஜ-4)

## விபத்தில் இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி -கனகம் புளியடிச் சந்திப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். காரும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் இவ்விபத்துச் சம்பவித்துள்ளது.

இதில் கோப்பாய் வடக்கு பகுதியைச் சேர்ந்த 21 வயது இளைஞன் ஒருவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (5-4-30)

## நாய்க்கு இறுதிச் சடங்கு



(கொழும்பு)

சிங்களப் பெண் ஒருவரினால் வளர்க்கப்பட்ட நாய் உயிரிழந்த நிலையில் அதன் இறுதிச் சடங்கு மிகவும் பிரமாண்டமாக நடத்தப்பட்டுள்ளது.

குறித்த நாயின் இறுதிச்சடங்குப் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் அதிகம் பகிரப்பட்டு வருகின்றது. அத்துடன் நாயின் எஜமானியான சிங்களப் பெண் ஒருவர் கதறி அழும் புகைப்படங்களும் வெளியாகியுள்ளன. (ஜ-4)

# வீட்டுத் திட்டப்பயனாளிகளுக்கு காசோலைகள் வழங்கி வைப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியில் 25 பயனாளிகளுக்கு கிராமத்திற்கு ஒரு வீடு, நாட்டிற்கு எதிர்காலம் எனும் தொனிப் பொருளின் கீழ் வீட்டுத் திட்டத்திற்கான காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

நேற்று முன்தினம் புதன்கிழமை தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/298, ஜே / 297 , ஜே / 294 , ஜே / 293 , ஜே /288 , ஜே / 289 , ஜே / 292 மற்றும் ஜே / 310 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு காசோலை வழங்கி வைக்கப்பட்டதுடன், வீட்டிற்கான அடிக்கல்லும் நாட்டி வைக்கப்பட்டது.



இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் அங்கஜன் இராம்நாதனின் செயலாளர் சதாசிவம் இராமநாதன், தென்மராட்சி பிரதேச சபை உறுப்பினர் தி.தங்கவேலு, தென்மராட்சிப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

தென்மராட்சியில் உள்ள ஏனைய வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கான காசோலைகளும் வழங்கி வைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு இலட்சம் ரூபாய் பெறுமதியான குறித்த வீட்டுத்திட்டமானது தங்களால் சொந்தமாக வீட்டினை நிர்மாணிக்க முடியாத கிராமத்திற்கு ஓர் பயனாளி வீதம் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்படுகிறது. (5-4-30)

# கரப்பந்தாட்ட போட்டிக்கு பதிவினை மேற்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் யாழ்.மாவட்ட தீவகத்தில் இருந்து கரப்பந்தாட்ட வீரர்களை தேசிய மட்டத்திற்கு கொண்டு செல்லும் வேலைத்திட்டத்தில் முதற்கட்டமாக தீவக அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியினை ஆண்கள், பெண்கள் பிரிவுகளாக எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடத்த திட்டமிட்டுள்ளது.

இச்சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் அணிகள் தங்கள் பதிவுகளை சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் சி.தயாளபாலன் (0776622078 கணேஸ்வரம், கரகுப்புலம். அளவெட்டி அல்லது ந.சுதேஸ்குமார் 47 அராலி வீதி சங்கானை (077 617 6988) என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் விண்ணப்ப முடிவு திகதி 05.12.2020 எனவும் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் அறிவித் துள்ளது. (5-4-105)

# பி.சி.ஆர்.பரிசோதனை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நேற்று வியாழக்கிழமை 50 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் உணவகங்களின் பணியாளர்கள் 18 பேர், சிகை அலங்கரிப்புத் தொழில் புரியும் 9 பேர், சந்தை வியாபாரிகள் 9 பேர், தனிமைப்படுத்தலில் இருந்த 4 பேர் உள்ளிட்ட 50 பேருக்கே இவ்வாறு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சாவகச்சேரி நகர சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பி.தளிர்ராஜ் தெரிவித்துள்ளார். (5-4-30)

**To the members of the Alumni faculty of Medicine,**

## NOTICE OF ANNUAL GENERAL MEETING

Notice is hereby given that the 5 th Annual General Meeting of the Alumni, Faculty of Medicine, Jaffna will be held at the Board Room, Faculty of Medicine, jaffna at 3 pm on 30th December 2020 (Wednesday) for the Following purposes.

1. To receive and adopt the report of the Committee and the Audited Accounts for the year ended 31st December 2019.
2. To elect officers bearers for 2020/2021
3. To appoint an Auditor
4. To consider any other business of which due notice has given.

BY ORDER OF THE COMMITTEE OF MANAGEMET

Vinayagamoorthty Elankumar
SECRETARY, THE ALUMNI FACULTY OF MEDICINE JAFFNA. (4761)

# வீட்டில் நுழைந்த முதலை



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள மகிழூர் கண்ணபுரத்திலுள்ள வீடு ஒன்றில் 10 அடி நீளம் கொண்ட முதலை நேற்றுக் காலை நுழைந்தது.

இதனையடுத்து அப்பகுதி மக்கள் பீதியடைந்தனர். அங்கு வனஜீவராசிகள் அதிகாரிகள் வரவழைக்கப்பட்டு பொது மக்கள் அவர்களுடன் ஒன்றிணைந்து குறித்த முதலையை மடக்கிப்பிடித்து எடுத்துச் சென்றுள்ளனர். (ஜ-4)

# இறுதிநாள் நிகழ்வும் இரத்தான முகாமும்

(யாழ்ப்பாணம்)

பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் தலைமைத்துவப் பயிற்சி நெறியின் இறுதிநாள் நிகழ்வும் இரத்ததான முகாமும் நாளை 28 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியின் சரஸ்வதி மண்டபத்தில் இடம் பெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண தலைமைச் செயலாளர் ஏ. பத்திநாதன் கலந்து கொள்வார். அத்துடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே. சிறிமோகனன், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எம். பிரதீபன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் பணிப்பாளர் பீ.ஏ.விக்ரமசிங்க, தேசிய இளைஞர் படையணியின் பணிப்பாளர் எல்.எச்.பி. சந்தநாத், கொக்குவில் தொழில்நுட்பவியல் கல்லூரியின் பணிப்பாளர் எஸ்.முகுந்தன், நைற்றா யாழ். மாவட்ட முகாமையாளர் ஜீ.ரி. ரத்னகுமார், உதவிச் செயலாளர் (யாழ்.மாவட்ட செயலகம்) திருமதி கே. கமலராஜன் ஆகியோரும் கலந்து கொள்வர். (5-7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/மகாஜனக் கல்லூரியில் 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 173 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த பிரதீபன் உதயதர்சினி தம்பதியரின் செல்வப் புதல்வன்

**செல்வன் பிரதீபன் தர்ஷன்**



அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு கல்வி கற்பித்த அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு மேலும் கல்வியில் முன்னேற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, தம்பி, அப்பப்பா, அப்பம்மா, பூட்டி, அத்தைமார்கள், மாமன்மார்கள்.

மயிலங்கூடல்,
இளவாலை.

(4757)

## மணிவிழா வாழ்த்து



27 ஆண்டுகளாக ஆசிரியப் பணியை சிறப்பாக ஆற்றி ஓய்வு பெறும் இந் நாளில் மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்

**திருமதி சுசீலா சிவானந்தன்**
*B.A.Dip.in.Edu*

அவர்களின் மணிவிழா நாளில் அவர்களுக்குப் பிறந்த நாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஓய்வுக் காலம் சிறப்பாகவும் நலமாகவும் அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

### சேவை விபரம்

| பாடசாலை | பதவி | ஆண்டு |
|---|---|---|
| யா/உரும்பிராய் இந்து கல்லூரி | நிர்வாக உதவியாளர் | 01.07.1994 -31.12.1994 |
| யா/கொடிகாமம் மத்திய கல்லூரி | நிர்வாக உதவியாளர் | 01.01.1995 -31.03.1997 |
| யா/கொடிகாமம் மத்திய கல்லூரி | ஆசிரியர் | 01.04.1997 -07.01.2007 |
| யா/சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை | ஆசிரியர் | 08.01.2007 -06.02.2007 |
| யா/ சென்றோக்ஸ் றோ.க.வித்தியாலயம் | ஆசிரியர் | 07.02.2007 -22.02.2015 |
| யா/ சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை | ஆசிரியர் | 23.02.2015 -27.11.2020 |

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை
யாழ்ப்பாணம்.

(4756)

# யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீடத்தில் புதிதாக தகவல் தொழில்நுட்பத்துறை அமைக்க அனுமதி

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புதிதாகத் தகவல் தொழில்நுட்பத் துறையை அமைப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

அதனடிப்படையில் கலைப்பீடத்தில் தகவல் தொழில் நுட்பத்துறையினை அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டிலிருந்து கலைப்பீட மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத் துறையில் கற்கைகளைத் தொடரமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும், கலைப்பீட மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன்களை அதிகரிக்கும் நோக்குடன் - கலைப்பட்டதாரிகளின் வேலைவாய்ப்புச் சந்தர்ப்பத்தை அதிகரிக்கும் செயற்றிட்டம் ஒன்றினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 2019 ஆம் ஆண்டு ஆரம்பித்திருந்தது.

இக்கருத் திட்டத்தின் பிரதான நோக்கம் கலைப்பீட மாணவர்களது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு மற்றும் அது தொடர்பான திறன்கள் ஆகியவற்றை மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் வேலைவாய்ப்புச் சந்தர்ப்பத்தை இலகுவில் பெறக்கூடிய வேலைப் படையாக மாற்றுதல் மற்றும் அவர்களே மற்றைய நபர்களிற்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் பிரிவினராகவும் மாற்றுதலாகும்.

அதற்கமைய, தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா, கலைப்பீடாதிபதி கலாநிதி க.சுதாகர், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ. ரகுராம், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். கபிலன் ஆகியோர் கலைப்பீட மாணவர்களுக்கெனத் தனியான தகவல் தொழில்நுட்பத் துறை ஒன்றை ஆரம்பிப்பதற்கான சாத்தியப்பாடுகளை ஆராய்ந்து, நடைமுறை உலகுக்கேற்றவகையில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

அந்த அறிக்கையின் அடிப்படையில், இலங்கையின் அனைத்து பல்கலைக்கழகங்களிலும் உள்ள கலைப்பீடங்களில் தகவல் தொழில்நுட்ப துறையினை உருவாக்கும் கருத்திட்ட செயல்முறையினை 2020 ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஆரம்பித்தது.

இக்கருத்திட்டத்தின் பிரகாரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் தகவல் தொழில்நுட்பத்துறையினை அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தகவல் தொழில்நுட்பத்துறைக்குரிய கட்டடம் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருப்பதுடன், ஏனைய உதவிகளையும், வழிகாட்டல்களையும் துணைவேந்தர் வழங்கி வருகிறார்.

தகவல் தொழில்நுட்பத் துறை ஆரம்பிக்கப்பட்டவுடன் மாணவர்கள் தமது பட்டக் கல்வியை கற்கும் அதே காலப்பகுதியில் தகவல் தொழில் நுட்பத்தில் சாதாரண சான்றிதழையும், டிப்ளோமா சான்றிதழையும் பெற்றுக்கொள்ள முடியும். கொழும்பு பல்கலைக்கழக கணனித் துறை தயாரித்த பாடத்திட்டத்துக்கமைவாக பாடநெறிகள் நடத்தப்படும் என துணைவேந்தர் தெரிவித்தார். (5-4-33)

# ஆட்டோ-மோ.சைக்கிள் விபத்து இளைஞர் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக் கட்டுவன் தெற்கு பலாலி பிரதான வீதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் ஊரெழுவைச் சேர்ந்த இளைஞரொருவர் காயமடைந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

புன்னாலைக்கட்டுவன் தெற்குப் பகுதி பலாலி வீதியில் சென்று கொண்டிருந்த ஆட்டோவும் அதன் பின்னால் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் மோதி விபத்து ஏற்பட்டது.


சம்பவத்தில் மோட்டார் சைக்கிளும் ஆட்டோவும் கடும் சேதங்களுக்கு உள்ளாகின. அத்துடன் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞனும் காயங்களுக்கு உள்ளானார்.

குறித்த சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-4-18)



**உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை பழைய மாணவர்களினால் மரக்கன்றுகள் பாடசாலை அதிபரிடம் அண்மையில் கையளிக்கப்பட்டன.**

# விருதினை வென்றது விமல்ராஜின் 'வெள்ளம்'




(யாழ்ப்பாணம்)

தமிழ்நாடு திரைப்பட விழாவில் விருதினை வென்றுள்ளது நம்நாட்டுக் கலைஞன் விமல்ராஜின் "வெள்ளம்" குறுந்திரைப்படம்.

தமிழ் நாடு திரைப்படவிழா கடந்த ஐப்பசி மாதம் 25 ஆம் திகதி முதல் கார்த்திகை மாதம் 22 ஆம் திகதிவரை சென்னையில் சிறப்பாக நடைபெ ற்றது.

இதில் முழுநீளத்திரைப்படங்கள், ஆவணப்படங்கள், அனிமேஷன் படங்கள், குறுந்திரைப்படங்கள், காணொளிப் பாடல்கள், மற்றும் விளம்பரப் படங்கள் என 52 நாடுகளிலிருந்து 298 படங்கள் தெரிவாகியிருந்தன.


இந்நிலையில் நம்நாட்டுக் கலைஞன் விமல்ராஜின் "வெள்ளம்" குறுந்திரைப்படம் சர்வதேச ரீதியில் சிறந்த குறுந்திரைப்படத்திற்க்கான "பார்வையாளர்" விருதினை வென்றுள்ளது. (5,4)

# வீதியை செப்பனிடுமாறு மக்கள் கோரிக்கை

(குருநகர்)

குருநகர் தொடர்மாடி கிழக்குப் பக்கமாக குடிமனைகள் ஊடாக அமைந்துள்ள போக்குவரத்து பாதை நீண்டகாலமாக புனரமைப்பு செய்யப்படாது குன்றும் குழியுமாக காணப்படுகின்றது என்று அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அப்பாதையில் மழை நீரும் கடல் நீரும் நிறைந்து உள்ளது என்றும் இதனால் அவ்வீதியினூடாக குடியிருப்பாளர்கள் பயணிக்க முடியாது பெரும் சிரமப்படுவதாகவும் எவ்வித வாகன போக்குவரத்தும் செய்ய முடியாதுள்ளதாகவும் அப் பகுதி குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.



அதுமட்டுமல்லாது கடல் அருகில் உள்ள வீதியாகையால் கடல்நீர் பெருக்கெடுக்கும் காலங்களில் மழைகாலத்தின் போதும் கடல்நீர் குடியிருப்புக்குள் உட்புகுந்து குடியிருப்பாளர்கள் குடியிருக்க முடியாது இடம்பெயரும் நிலைமையும் ஏற்படுகின்றது. கடல் நீரைக் கட்டுப்படுத்த தடுப்பணை அமைக்கப்பட வேண்டும் என்றும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். இவ்விடயங்கள் சம்பந்தமாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-106)

# பிள்ளையார் கதை படிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணார்பண்ணை வடக்கு- கிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் முதலாம் திகதி முதல் தினமும் காலை பூஜையைத் தொடர்ந்து பிள்ளையார் கதை படிப்பு நடைபெறும்.

அதனைத்தொடர்ந்து காலை 11.30 மணிக்கு விசேட அபிசேகமும் நடைபெறும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கா்லை 10.30 மணிக்கு மஹா கணபதி ஹோமமும் 20 ஆம் திகதி காலை பூஜையுடன் பெருங்கதை படிப்பு பூர்த்தியாகும்.

அன்றே மாலை 3 மணிக்கு விநாயகர் ஷஷ்டி உற்சவம் நடைபெறும்.

குறித்த நிகழ்வுகள் யாவும் கொவிட்-19 சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (5)



**சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் வரணி பிரதேச வைத்தியசாலைக்கு கடந்த திங்கட்கிழமை மருத்துவ உதவிப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதில் முகக் கவசம், தொற்று நீக்கி திரவங்கள் மற்றும் கொரோனா அங்கிகள் ஆகியன வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியிடம் கையளிக்கப்பட்டன. (படம்: சுபேசன்)**

# சமய தீட்சை

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகியம்மன் ஆலயத்தில் நாளை மறுதினம் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு சமய தீட்சை வழங்கும் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

சமய தீட்சை பெற விரும்புவோர் ஆலயத்தில் தங்கள் பெயர் விபரங்களை பதிவு செய்து கொள்ளுமாறு ஆலய பரிபாலனசபையினர் கேட்டுக் கொள்கின்றனர். (5)

# அன்று முதல் இன்று வரை ஆதரிக்கும் உங்களுக்கு


அமரர் திரு. கே. கனேஸ்
ஓய்வு பெற்ற யாழ்.அரசாங்க அதிபர்


திரு.நா. வேதநாயகன்
ஓய்வு பெற்ற யாழ்.அரசாங்க அதிபர்


திரு.க. மகேசன்
யாழ்.அரசாங்க அதிபர்


திருமதி.ப. யோகேஸ்வரி
முன்னாள் முதல்வர், யாழ்.மாநகர சபை


திரு.இ. ஆனல்ட்
முதல்வர், யாழ்.மாநகர சபை

**கடந்த 16 வருடங்களாக எமக்கு பக்கபலமாக இருக்கும் வாடிக்கையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் குறிப்பாக இக்கட்டான காலகட்டத்தில் சிறுப்பிட்டியில் அமைந்துள்ள எமது நிறுவனத்தை ஆரம்பித்து வைத்த திருமதி.பற்குணராசா யோகேஸ்வரி அவர்களுக்கும் யாழருவியின் புதிய திட்டமான சங்கிலித் திட்டத்தை ஆரம்பித்து வைத்த திரு.இமானுவல் ஆனல்ட் அவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளை யாழருவி நிர்வாகம் தெரிவித்துக் கொள்கின்றது.**

YARLARUVI
LIVE WITH NATURE

www.yallaruvi.com

**021 439 8122**
**074 042 8122**

(4767)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: மூலம் 3
கி.பா: 24 செவ் 8 இல் உயரம்: 6'2"
தகைமை/தொழில்: **Bachelor in Computer Scince Operation Analyst (Private)**
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச உத்தியோகமுள்ள பெண்
தொ.இ: **B/11418**

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 1
கி.பா: செவ் 10 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த.சுவிஸில் வேலை செய்கின்றார்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: **B/11421**

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பூசம் 4
கி.பா: 12 1/2 செவ் 5 இல்
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. **Finance Assistant Manager**
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: **B/11422**

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 2
கி.பா: 28 3/4 செவ் 11 இல் உயரம்: **172cm**
தகைமை/தொழில்: **B.Sc Engineering** ஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச உத்தியோகமுள்ள பெண்
தொ.இ: **B/11423**

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 4
கி.பா: 33 1/2 செவ் 6 இல் உயரம்: **162cm**
தகைமை/தொழில்: **MBBS. Doctor**
எதிர்பார்ப்பு: **Doctor, Engineer, Lecturer, Accountant**
தொ.இ: **G/11445**

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: பூராடம் 4
கி.பா: 44 செவ் 7 இல் உயரம்: 5'2"
தகைமை/தொழில்: ஆங்கில ஆசிரியை
எதிர்பார்ப்பு: படித்த மணமகன் உத்தியோகம், சொந்த வியாபாரம் செய்பவர்
தொ.இ: **G/11455**

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: மகம் 4
கி.பா: 17 3/4 சூரி,செவ் 11 இல் உயரம்: **150cm**
தகைமை/தொழில்: பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: தனியார் வங்கி, அரச உத்தியோகமுள்ள மணமகன்
தொ.இ: **G/11457**

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: சூரி, செவ் 11 இல் உயரம்: 5'5"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.
எதிர்பார்ப்பு: வெளிநாட்டவர் அல்லது தகுந்த உத்தியோகத்தர்
தொ.இ: **G/11460**

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**


# பி.சி.ஆர்.பரிசோதனையில் கலந்துகொள்ளாதவர்களுக்கு வழக்கு

(கொழும்பு)

சில நபர்களை பி.சி.ஆர்.பரிசோதனைக்காக அழைத்திருந்த போதும் அவர்கள் கலந்து கொள்ளவில்லை என தகவல் கிடைத்துள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான நபர்களை கைது செய்வதற்காக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.



இதேவேளை, நாடு பூராகவும் 29 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இதுவரை தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக பெயரிடப்பட்டுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் 13 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் கம்பஹா மாவட்டத்தில் 5 பிரிவுகளும் களுத்துறை மாவட்டத்தின் 9 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் மற்றும் கண்டி மாவட்டத்தின் 2 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர்மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# 13 பேருக்குக் கொரோனா! முடங்கியது அக்கரைப்பற்று!

(அக்கரைப்பற்று)

கிழக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான மேலும் 13 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி லதாகரன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் 10 பேரும் சாய்ந்தமருதில் ஒருவரும் மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடியில் இருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனால் அக்கரைப்பற்று சமூக முடக்கலுக்கு உட்படுத்தப்படுவதாக அவர் அறிவித்துள்ளார்.

இதனால் கிழக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 144 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# டெங்கு பரவும் அபாயம்



(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு சுகாதார பணிமனைக்குட்பட்ட விசுவமடு பொது மயானத்திற்கு அருகில் துர்நாற்றம் வீசுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பொது மயானத்திற்கு அருகிலுள்ள ஏ-32 வீதிக்கருகில் பயணிப்போர் கழிவுப் பொருட்களை வீசிவிட்டு செல்வதால் துர்நாற்றம் வீசுவதுடன் டெங்கு பரவும் அபாயமும் காணப்படுகிறது.

தற்போது பருவமழை ஆரம்பித்துள்ளதால் அப்பகுதியில் மழைநீர் தேங்கி நிற்கிறது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (5-4-316)



கரைச்சி பிரதேச சபையின் ஏற்பாட்டில் இரணைமடு சந்திப்பகுதியில் மரக்கன்றுகள் நேற்று முன்தினம் நாட்டப்பட்டன.இதில் பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் உறுப்பினர் கள் கலந்து கொண்டனர். (படம்:- சப்தசங்கரி)

# எமது உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்பட்டுக்கொண்டே இருக்கின்றது

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்

(முறிகண்டி)

கடந்த 30 வருடங்களுக்கும் மேற்பட்ட உரிமை போராட்டத்தில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள், யுவதிகள் தமது இன்னுயிரை தியாகம் செய்துள்ளனர்.

இவர்கள் யார்? இவர்கள் எதற்காக தம் உயிரை அர்ப்பணித்தார்கள்? இந்த இளையவர்கள் தமது இளவயதில் தமது இளவயதுக்கே உரிய ஆசைகளைத் துறந்து ஒடுக்கப்பட்ட தமிழர்களின் விடுதலைக்காய் போராடி தம் உயிரை ஆகுதியாக்கியவர்கள்.

இவர்களும் எல்லோரையும் போல அம்மா, அப்பா, குடும்ப உறவு, உழைப்பு என்று குறுகிய வட்டத்திற்குள் இருந்திருக்க முடியும்.

ஆனால் அவர்கள் அப்படி சிந்திக்காது எமது இனத்திற்காக தம் உயிரை ஈந்தவர்கள். எனவே இந்த மாவீரர்கள் அனைவரும் தமிழர்களின் பிள்ளைகள். எம்மினத்தின் உறவுகள். அவர்கள் அனைவரையும் நினைவுகூருவதற்கான நாளே இந்த நவம்பர் 27. இந்த நாளில் 30 வருடங்களாக நாம் நினைவேந்தி ஈகச் சுடரேற்றி வருகின்றோம.

ஆனால் இந்த வருடம் புதிதாக ஆட்சிக்கு வந்த அரசால் இந்த உரிமையும் மறுக்கப்பட்டுள்ளது. இந்த அரசு பதவிக்கு வந்ததிலிருந்து தமிழர்கள் பல விதங்களிலும் ஒடுக்கப்பட்டு வருகின்றார்கள். நில அபகரிப்பு, சிங்கள பௌத்த மயமாக்கல், தமதுவழிபாட்டு சுதந்திர மறுப்பு, கருத்து சுதந்திர மறுப்பு, நினைவுகூருவதற்கான உரிமை மறுப்பு என்பன திணிக்கப்படுகின்றன என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. அவ் அறிக்கையில்,

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம் இன்றுடன் 1376 நாட்களாக நீதிக்காகப் போராடி 79 பெற்றோரையும் இழந்த நிலையில் நாங்களும் நோய்வாய்ப்பட்டு எமது நாட்களை எண்ணிக் கொண்டிருக்கின்றோம்.

இந்த நிலையில் கூட எமது பிள்ளைகளுக்குரிய நீதியைத் தர முன்வராத இந்த அரசும் நீதிமன்றமும் எம்மைத் துரத்தித்துரத்தி மாவீரர்களை நினைவேந்த தடைவிதித்த நீதிமன்ற ஆணையை எமக்கு கையளிக்கின்றது.

இதுவரை முல்லைத்தீவு, அம்பறை மாவட்டத் தலைவிகளுக்கு மற்றும் மட்டக்களப்பு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் அனைவருக்கும் தடை உத்தரவு ஒப்படைக்கப்பட்டுள்ளது. வேறு சிலருக்கு கையளிக்க முயன்றுள்ளனர். இது எந்த வகையில் நியாயமானது.

அனைத்துலக குடிசார் மற்றும்அரசியல்உரிமைகள்உடன்படிக்கை சரத்து 21 இனால் பாதுகாக்கப்பட்ட ஒன்றுகூடும் உரிமை அப்பட்டமாக மறுக்கப்பட்ட நிலையிலேயே தமிழர் தாயகத்தில் இன்று தமிழ் மக்கள் தொடந்து ஒடுக்கப்பட்டு வருகின்றனர்.

17 செப்டெம்பர் 2020 மனித உரிமைகள் குழுவின் பொதுக் கருத்திலும் ஒன்றுகூடும் உரிமையும் நினைவேந்தல் உரிமையும் மீளவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆயினும் இலங்கை அரசானது சர்வதேச நியமனங்களை எப்போதும் புறந்தள்ளி ஒடுக்குமுறையையே தொடர்ந்து பிரயோகித்து வருகின்றது.

ஆகவே இந்த அறிக்கையின் மூலம் நாம் எமது உரிமைகளைப் பாதுகாக்கவும் எமது உறவுகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதற்கான வாழும் சாட்சிகள் ஆகிய எம்மை சர்வதேச நியமங்களுக்கேற்ப பாதுகாக்க முன்வருமாறும் ஐக்கிய நாடுகள் சபையிடமும் சர்வதேச சமூகத்திடமும் வேண்டி நிற்கின்றோம் என அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-100)

# பேருந்து-மோ.சைக்கிள் விபத்து

## பெண் ஒருவர் படுகாயம்




(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்திற்கு முன்பாக நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை குறித்த பெண் மோட்டார் சைக்கிளில் பாடசாலைக்குத் தனது பிள்ளையை ஏற்றிக் கொண்டு சென்று இறக்கி விட்டு மீண்டும் வீடு செல்ல முற்பட்ட வேளையில் முள்ளியவளை பகுதியில் இருந்து முல்லைத்தீவு நோக்கி வந்துகொண்டிருந்த பேருந்துடன் மோதி விபத்து ஏற்பட்டது.

இவ்விபத்தில் காயமடைந்த பெண் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவ இடத்திற்குச் சென்ற முள்ளியவளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-4-281)

# வீதித்திட்ட பதாகைகள் விசமிகளால் சேதம்



(நெளுக்குளம்)

அமைச்சரால் திரை நீக்கம் செய்யப்பட்ட வீதித்திட்ட பதாகைகள் விசமிகளால் கிழித் தெறியப்பட்டுள்ளன.

3 கிலோமீற்றர் நீளமான வவுனியா கற்பகபுரம் பிரதான வீதி மற்றும் 1.7 கிலோமீற்றர் நீளமான பாலா மைக்கல் வீதி என்பன ஜனாதிபதியின் ஒரு இலட்சம் கிலோமீற்றர் வேலைத் திட்டத்தின் கீழ் காப்பெற் இடும் பணிக்காக 126.69 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.

குறித்த வீதிகள் புனரமைப்புக்கான ஆரம்பப் பணிகளை கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் நிமல்லன்சா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மஸ்தான் ஆகியோரால் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அத்துடன் பிரதமர் மற்றும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் புகைப்படங்களுடன் கூடிய வீதித்திட்ட பதாகைகளையும் திறந்து வைத்திருந்தனர்.

இவ்வாறு திரைநீக்கம் செய்யப்பட்ட குறித்த வீதித் திட்ட பதாகைகள் விசமிகளினால் கிழித் தெறியப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளன. (5-4-299)

# சீர் செய்யப்படுமா நிழற்குடை?

(நெளுக்குளம்)

வவுனியா பூவரசங்குளம் பகுதியில் நீண்டகாலமாக பயன்பாட்டிலுள்ள பேருந்து தரிப்பிட நிழற்குடை சிதைவடைந்து பாவனைக்கு உதவாத நிலையில் இருப்பதனால் மழைகாலத்தில் பாடசாலை மாணவர்களும் பயணிகளும் பல்வேறு அசௌகரியங்களை முகம்கொடுத்து வருகின்றனர்.

வவுனியா மாவட்டத்தையும் மன்னார் மாவட்டத்தையும் இணைக்கும் பிரதான வீதியில் பூவரசங்குளம் சந்தியில் அமைந்திருக்கும் நிழற்குடையே இவ்வாறு சிதைவடைந்து காணப்படுகின்றது.

கடந்த பல வருடங்களாக இவ்வாறு சிதைவடைந்து பாவனைக்கு உதவாத நிலையில் இருக்கும் பேருந்து தரிப்பிடத்தில் நாளொன்றுக்கு நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களும் பொது மக்களும் இந்தத் தரிப்பிடத்தையே பயன்படுத்துகின்றனர்.

கோவில்புளியங்குளம், செங்கற்படை, வேலங்குளம், சின்னத்தம்பனை, மடுக்குளம், சிவநகர், தந்தங்குளம், குருக்களூர், கண்ணாட்டி, செட்டிகுளம், தட்டாங்குளம், சண்முகபுரம், உட்பட்ட பல கிராமங்களை சேர்ந்த பாடசாலை மாணவர்களும் கிராமவாசிகளும் பல்வேறு தேவைகள் நிமிர்த்தம் பொதுப்போக்குவரத்தில் ஈடுபடுவதற்காக குறித்த தரிப்பிடத்தில் காத்திருக்கின்றனர்.

எனவே இந்நிழற்குடையைச் சீர்படுத்தித் தருமாறு பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் இதுவரை நிவர்த்திக்கப்படவில்லை. இனிமேலாவது அக்கறை காட்டுவார்களா? (5-4-299)

# இராசிபலன்

27.11.2020
கார்த்திகை 12, வெள்ளிக்கிழமை
துவாதசி முற்பகல் 9.38 மணிவரை
அச்சுவினி பின்னிரவு 2.21 மணிவரை
சுபநேரம் 6.12-7.42 மணிவரை
இராகுகாலம் 10.42-12.12 மணிவரை
சந்திராஷ்டமம் அத்தம்
பிரதோச விரதம், அமிர்த சித்தம்

வளவன்


மேஷம்

பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், கனவு பலிதமுண்டு, தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.


ரிஷபம்

விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், சயன சுகக் குறைவான நாள்.


மிதுனம்

எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.


கடகம்

தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், செய்தொழில் மேன்மையுண்டு.


சிம்மம்

தொழிலில் ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம்மாறுவர், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வருங்காலத்திற்கான திட்டமொன்றைத் திட்டுவீர்கள், பேச்சில் இனிமை தென்படும்.


கன்னி

வழிபாட்டால் சிறப்புகளை காண வேண்டிய நாள், குடும்பப் பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.


துலாம்

குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும் நாள், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


விருச்சிகம்

விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், திட்டமிட்ட காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.


தனுசு

நெடு நாளைய கனவுகள் நனவாகலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.


மகரம்

பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுபவிரயங்கள் கூடும் நாள்.


கும்பம்

முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு.


மீனம்

எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முன்னேற்றம் தரும், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், இறைவழிபாட்டில் ஆர்வம் கூடும்.

உனக்குள் வாழும் பாவங்கள் படமெடுக்கும் பாம்புகள் போன்றவை

# நாட்டின் உள்ளக விவகாரங்களில் சர்வதேச தலையீட்டுக்கு இடமில்லை

## கோட்டா அரசு உறுதி

**(கொழும்பு)**

**நாட்டின் உள்ளக விவகாரங்களில் எந்தவித சர்வதேச தலையீடுகளும் வருவதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. நாட்டின் உரிமைகள் குறித்து தீர்மானிக்கும் அதிகாரம் எமக்கு இருக்க வேண்டும் என்பதற்காகவே ஜெனிவா பிரேரணையில் இருந்து வெளியேறினோம் என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சபையில் சுட்டிக்காட்டினார்.**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு கிடைத்துள்ள மக்கள் ஆணையின் பிரகாரம் உள்ளக ரீதியில் உண்மைகளை கண்டறிய நடவடிக்கை எடுப்போம் எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஊடகம், வெளிவிவகார அமைச்சுகள் மற்றும் பிராந்திய உறவு அலுவல்கள் இராஜாங்க அமைச்சிற்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான விவாதத்தில் உரையாற்றிய போது அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

எமது அரசாங்கம் நாட்டில் சகல இனமக்களுடனும்இணைந்தே பயணிக்கின்றது. அவ்வாறு இருக்கையில்எந்த வொரு சர்வதேச நாடும் எமது உள்ளக விடயங்களில் தலை யிடுவது எமக்கு விருப்பமில்லை.



நாம் ஏனைய நாடுகளின் விடயங்களில் அவர்களுக்கு மதிப்பளித்து செயற்படுகின்றோம். அதேபோல் எமது நாட்டின் உரிமைகள் குறித்து தீர்மானிக்கும் அதிகாரம் எமக்கு இருக்க வேண்டும்.

இதனைத்தான் ஜெனிவாவில் நாம் தெரிவித்தோம். மனித உரிமைகள் பேரவை கொண்டுவந்த பிரேரணையை நாம் நிராகரிக்கவும் காரணம் அதுவேயாகும். இந்த யோசனைகளை எம்மால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இது எமது தேசிய நிறுவனங்களை பலவீனப்படுத்தும்.

ஒரு நாடு இன்னொரு நாட்டில் அநாவசியமான தலையீடுகளை ஏற்படுத்த முடியாது. இலங்கைக்கு ஒத்துழைப்புகளை வழங்கும் செயற்பாடுகளில் நாம் இணைந்து செயற்படுவோம். ஆனால் எமது உள்ளக விடயங்களில் சட்ட உள்நுழைவுகளை கொண்டுவர முடி யாது.

இலங்கை எப்போதும் சுயாதீன நாடாக செயற்படவே விரும்புகின்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு மக்கள் ஆணை கிடைத்துள்ளது. இதனை கொண்டு நாம் உண்மைகளை கண்டறிய நடவடிக்கை எடுப்போம் என தெரிவித்தார். (ஐ-4)

# வங்கி தீக்கிரை

(வத்தளை)

வத்தளை, ஹெந்தல வீதியில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

நேற்றுக் காலை ஏற்பட்ட இந்த தீப்பரவலில் குறித்த வங்கி முழுமையாக தீக்கிரையானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீ விபத்திற்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தின் காரணமாக காயங்கள் அல்லது உயிரிழப்புகள் எதுவும் இதுவரையில் பதிவாகவில்லை என தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ-4)

## 25 ஆம் ஆண்டு நினைவு

மலர்வு
11.02.1944
உதிர்வு
20.11.1995



அமரர்
கிட்ணர் சிவராஜா

## 5 ஆம் ஆண்டு நினைவு

மலர்வு
25.11.1941
உதிர்வு
08.11.2015



அமரர்
சிவராஜா இராசலட்சுமி

உங்களுடனான எங்களின் பிணைப்பு
நாம் உயிருடன் உள்ளவரை
வாழ்ந்து கொண்டே இருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்


பழம் வீதி, ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்.

(4760)

# இந்தியாவில் நிவர் புயலின் பதிவுகள்





## பில்கேட்ஸை முந்திய எலான்



(பேர்லின்)

உலக பணக்காரர்கள் பட்டியலில் பில்கேட்ஸை பின்னுக்குத்தள்ளி இரண்டாவது இடத்திற்கு எலான் மஸ்க் முன்னேறி உள்ளார்.

அவரது டெஸ்லா கார் நிறுவனத்தின் பங்குகள் விலை ஏறியதையடுத்து அவரது சொத்து மதிப்பு 7.2 பில்லியன் டொலர்களில் இருந்து. 128 பில்லியன் டொலர்களாக உயர்ந்துள்ளது.

ப்ளூம்பெர்க் பில்லினியர்கள் பட்டியல் தரும் தகவல்களின் படி. உலகப் பணக்காரர்கள் பட்டியலில் அமேசன் நிறுவுநர் ஜெப் பெசோஸ் முதலிடத்தில் உள்ளார். அவருக்கு அடுத்த இடத்தில் எலான் மஸ்க் உள்ளார். (நி-4)

## பாலியல் துஷ்பிரயோக குற்றவாளிக்கு தூக்கு - அமைச்சரவை ஒப்புதல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக அதிகரித்து வரும் பாலியல் குற்றங்களைத் தடுக்கும் வகையில், அந்தக் குற்றங்களில் ஈடுபடுவோரைத் தூக்கிலிட வகை செய்யும் அவசரச் சட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகளை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்குவோரைத் தூக்கிலிடுவது, அவர்களுக்கு இரசாயன முறையில் ஆண்மை நீக்கம் செய்வது ஆகிய தண்டனைகளுக்கு வழிவகுக்கும் இரண்டு அவசர சட்டத்துக்கு பாகிஸ்தான் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளதாக ஊடகங்கள்செய்திவெளியிட்டுள்ளன.(நி-4)

## கிறிஸ்மஸ் பண்டிகைக்குள் கொவிட்-19 தடுப்பூசி

### ஐரோப்பிய ஒன்றியம் நம்பிக்கை

(புரூசெல்ஸ்)

எதிர்வரும் கிறிஸ்மஸ் பண்டிகைக்குள் உறுப்பு நாடுகளில் பொதுமக்களுக்கு கொரோனா வைரஸ் தடுப்பூசி செலுத்தத் தொடங்கப்படும் என ஐரோப்பிய ஒன்றியம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.


இதுகுறித்து ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வோண்டெர் லெயென் தெரிவிக்கையில்,

'கொரோனாத் தடுப்பூசியைப் பெறுவதில் நம்பிக்கை ஒளி தென்படுகிறது. கிறிஸ்மஸ் பண்டிகைக்குள் ஐரோப்பாவில் அந்தத் தடுப்பூசி பொதுமக்கள் பயன்பாட்டுக்கு வந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




எதிர்வரும் டிசெம்பர் மாத இறுதிக்குள், ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளில் உள்ளவர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தத் தொடங்கப்படக் கூடும்' எனவும் தெரிவித்தார். (நி-4)

## வெள்ளிக்கிரக ஆய்வு இந்தியாவுடன் இணையும் சுவீடன்




(டில்லி)

இந்தியா மேற்கொள்ளும் வெள்ளிக் கிரகம் குறித்த ஆய்வு திட்டமான "சுக்ரயான்" செயற்கைக் கோள் திட்டத்தில் ஐரோப்பிய நாடான சுவீடன் இணைந்துள்ளது.

இது குறித்து இந்தியாவுக்கான சுவீடன் தூதர் கிளாஸ் மோலின் தெரிவிக்கையில் "இஸ்ரோவின் வெள்ளிக் கிரக ஆய்விற்கான சுக்ரயான் திட்டத்தில் சுவீடன் விண்வெளி இயற்பியல் மையம் பங்கு கொள்கிறது.

சுக்ரயான்செயற்கைக்கோளில் சுவீடனின் 'வி.என்.ஏ.' என்ற கருவி பொருத்தப்படும். இது சூரியனில் இருந்து வெளிப்படும் அணுப் பொருட்களால் வெள்ளியின் வளி மற்றும் புற மண்டலங்களில் ஏற்படும் தாக்கத்தை ஆய்வு செய்வதற்கு உதவும்" எனத் தெரிவித்துள்ளார்.(நி-4)

## ஒரே ரொக்கெட் 60 செயற்கைக்கோள்கள் விண்ணில் செலுத்தியது அமெரிக்கா



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் கேப் கேனவெரலில் இருந்து பால்கன் 9 ரொக்கெட் மூலம் ஒரே சமயத்தில் 60 செயற்கை கோள்கள் விண்ணில் செலுத்தியுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த தனியார் விண்வெளி ஆய்வு நிறுவனமான 'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனம் விண்வெளி ஆய்வில் பல்வேறு சாதனைகளை புரிந்து வருகிறது.

அந்த வகையில் உலகம் முழுவதும் சீரான மற்றும் அதிவேக இணைய சேவை வழங்குவதற்காக 'ஸ்டார் லிங்க்' என்ற திட்டத்தை செயற்படுத்த 'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனம் முடிவு செய்துள்ளது.

இதற்காக தலா 227 கிலோ எடையுடைய 1,440 செயற்கைக்கோள்களை விண்ணில் நிலைநிறுத்துவதை இலக்காகக் கொண்டு ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் தொடர்ந்து செயற்கை கோள்களை விண்ணுக்கு அனுப்பி வருகிறது.

அந்த வகையில் 16-ஆவது கட்டமாக நேற்று முன்தினம் அமெரிக்காவின் கேப் கேனவெரலில் இருந்து பால்கன் 9 ரொக்கெட் மூலம் ஒரே சமயத்தில் 60 செயற்கைக்கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டது.

இந்த 60 செயற்கைக்கோள்களுடன் சேர்த்து ஒட்டுமொத்தமாக 955 செயற்கைக்கோள்களை ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் விண்ணில் செலுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

## லடாக்கில் போர் விமானங்கள் பறக்கவிடப் போவதாக சீனா அறிவிப்பு

(பீஜிங்)

போர் விமானங்களை சர்ச்சைக்குரிய லடாக் எல்லைப் பகுதியில் பறக்கவிடப் போவதாக சீனா அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

சீனாவுக்கும் இந்தியாவுக்குமான எல்லைப்பிரச்சினை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. லடாக்கை கைப்பற்ற சீனா அவ்வப்போது எல்லையில் அத்துமீறி வருகிறது.

உலகின் மிகவும் பதற்றமான இரு நாடுகளின் எல்லைப் பகுதிகளில் ஒன்றான சீன-இந்திய எல்லை தற்போது சீனாவில் கண்காணிக்கப்படுகிறது.

முன்னதாக சீனா சிறிய டிரோன்கள் மூலமாக இந்தியாவை அவ்வப்போது எல்லையில் கண்காணித்து வந்தது.

தற்போது போர் விமானங்களை லடாக் எல்லைப் பகுதியில் பறக்க விடுவதாக சீனா தற்போது அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

இது இரு நாடுகள் இடையே மேலும் பகையை ஏற்படுத்த வாய்ப்பாக அமைந்துள்ளது.(நி-4)

# தவறு செய்தவர்கள் பலர் இருக்க ஒரு சிலர் தண்டிக்கப்படுவது ஏன்?

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி கேள்வி

(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல்களை தடுக்காமை தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய அதிகாரிகள் பலரும் இருக்கும் போது, அதற்காக முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோரை மட்டும் கைது செய்தமை நியாயமில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் தெரிவித்தார்.**



உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் சாட்சியம் அளிக்கும் போதே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பில் வெளிநாட்டு உளவுச் சேவை ஒன்றிலிருந்து கிடைத்த தகவலை, அப்போதைய தேசிய உளவுச் சேவை பிரதானி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்த்தன ஜனாதிபதிக்கு அறிவிக்காமை ஊடாக அவரது பொறுப்பை மீறியுள்ளார் அல்லவா என விசாரணை ஆணைக்குழுவினால் வினவப்பட்டது.

அதற்கு பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஒரு அதிகாரியை மட்டும் கடமை தவறியதாக குறிப்பிட தான் விரும்பவில்லை என்றும் தாக்குதல் நடக்கப் போவதாக தகவல் கிடைத்தும், அதனை தனக்கு அறிவிக்காத அனைவரும் பொறுப்புக்கூற வேண்டும் என அவர் சுட்டிக்காட்டினார்.

அப்படியானால் குறித்த பொறுப்பு தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலரும், முன்னாள் பொலிஸ்மா அதிபரும் மட்டும் 4 மாதங்களுக்கு மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை நியாயமானதில்லையா? எனவும் வினாவிற்குப் பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரி, ஆம் அது நியாயமில்லை என குறிப்பிட்டார்.


இந்நிலையில், அப்படியானால், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் நடந்து இரு நாட்களுக்குள் எந்த விசாரணையும் நடத்தாது, தாக்குதலை தடுக்காமைக்கு ஹேமசிறியும், பூஜிதவும் தான் காரணம் என தாங்கள் வெளிப்படையாக கூறினீர்கள் அல்லவா என இதன்போது சட்டத்தரணி தில்ஷான் ஜயசூரிய வினவினார்.

அதற்குப் பதிலளித்த மைத்திரி, 2019 ஏப்ரல் 22 ஆம் திகதி தேசிய பாதுகாப்பு கவுன்சிலில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களை அடிப்படையாக வைத்தே தான் அப்போது அதனை கூறியதாக தெரிவித்தார்.

குண்டுவெடிப்பை தடுக்காமை தொடர்பில் உங்களுக்கு எந்தப் பொறுப்பும் இல்லையா என சட்டத்தரணி தில்ஷான் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த மைத்திரி, தான் எந்தத் தவறும் செய்யவில்லை என்றார்.

நீங்கள் மாகந்துரே மதூஷ் போன்ற குற்றவாளிகளை இந்நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுத்தீர்கள்தானே? என்ற கேள்விக்கு அதனை நான் செய்யவில்லை. பொலிஸாரும் சட்டமா அதிபர் திணைக்களத்தினருமே செய்தனர் எனப் பதில் அளித்தார். (நி-4-7)

# வீசிய சுழல் காற்றால் வீடுகள், கட்டடங்கள் சேதம்





(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கிரான்குளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை வீசிய சுழல் காற்று காரணமாக பல வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், பொது கட்டடங்களுக்கும் சேத மேற்பட்டுள்ளது.

வீடுகள் மேல் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதுடன், சில வீடுகளின் கூரைகள் காற்றினால் அள்ளிச் செல்லப்பட்டுள்ளன. கடந்த சில நாட்களாக நிவர் புயல் தொடர்பான அறிவுறுத்தல்கள் வடக்கு, கிழக்கு கரையோரப் பகுதிகளுக்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு தொலைக்காட்சி சேவை பயனுள்ளது

(கொழும்பு)

தற்போதைய நிலையில் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு தொலைக்காட்சி சேவைகளை முழுமையாக பயன்படுத்துவது மிகவும் பயனுள்ளதாக அமையுமென பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது இணையவழி கல்வி முறைமையே இடம்பெற்று வருகின்றது. இது இலவச கல்வி முறைக்கு பாதிப்பாக காணப்படுகின்றது. கொவிட்-19 தொற்று நோய் காரணமாக எப்படியாவது பிள்ளைகளுக்கு கல்வியை பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. இதிலே அதிக டேட்டா வசதிகளை பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

அத்துடன் ஒரே குடும்பத்தில் இரண்டு அல்லது மூன்று பிள்ளைகள் இருந்தால் அவர்களுக்கு தொலைபேசி மற்றும் கணனி வசதிகளை பெற்றுக் கொடுக்க முடியாத நிலை உள்ளது. ஆகையால் தொலைக்காட்சி சேவைகளை இதற்காக பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன் என அவர் தெரிவித்தார். (நி-4-7)

# 165 மில்லியன் டொலரை கடனாக வழங்கியது ஆசிய அபிவிருத்தி வங்கி

(கொழும்பு)

165 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கைக்கு கடனுதவியாக வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.

கொவிட்-19 தொற்று நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை கருத்திற் கொண்டே இந்த கடனுதவி வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் உள்ள ஆசிய அபிருத்தி வங்கி அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதன்படி பெண்கள் மற்றும் தேயிலை சிறு உரிமையாளர்கள் தலைமையிலான வணிகங்கள் உட்பட சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு இந்த கடனுதவி பயன்படுத்தப்படும்.

கொவிட் -19 நெருக்கடியினால் இலங்கையின் பொருளாதாரம் கடுமையாக பாதிப்படைந்துள்ளது. ஏற்றுமதி சார்ந்த தொழில்களின் தேவை மற்றும் விநியோக சங்கிலி சீர்குலைவு காரணமாக இது பொருளாதார மந்தநிலைக்கு வழிவகுத்துள்ளதுடன், இந்நிலை படிப்படியாக ஏனைய துறைகளிலும் பரவியுள்ளதாகவும் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தங்கள் வணிகங்களை புதுப்பிக்க இந்த நிதியுதவி முக்கியமானதாக அமையும் என ஆசிய அபிவிருத்திவங்கி சுட்டிக்காட்டியுள்ளது. (நி-4-7)

# JOB வேலை வாய்ப்பு

## விண்ணப்பங்கள் கோரல்

பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் கரவெட்டி பிரதேச செயலக பிரிவில் பிறப்பு, இறப்பு, விவாகம் (பொது) பதிவாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் ஜே/363, 364, 365, 366, 367, 368, 369, 370, 371, 372, 373, 374, 375, 376, 377, 378, 379, 380, 381 ஆகிய கிராம அலுவலகர் பிரிவில் உள்ள 30 - 50 வயதிற்கு இடைப்பட்ட திருமணமாகிய (கணவன், மனைவி உயிருடன் இருத்தல் வேண்டும்) ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உரிய விண்ணப்பப்படிவத்தினை www.rgd.gov.lk எனும் இணையத்தளத்திலோ அல்லது மாவட்ட செயலக காணி பிரிவிலோ அல்லது பிரதேச செயலகத்திலோ பெற்றுக்கொள்ள முடியும் எனவும் விண்ணப்பங்களை 2020.12.14 திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் கர வெட்டி பிரதேச செயலாளர் ஈ. தயாரூபன் அறிவித்துள்ளார். (5-4-60)

# இராணுவ சிப்பாய் கைது

(கொழும்பு)

சியம்பலாண்டுவ, கொடயான, தொம்பகஹவில பகுதியில் ரி-56 ரக துப்பாக்கியுடன் முன்னாள் இராணுவ சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீட்டுக்குள் துப்பாக்கியை மறைத்து வைத்திருந்த நிலையில், குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலை அடுத்து, நேற்று முன்தினம் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


53 வயதுடைய குறித்த நபர் 12 வருடங்களுக்கு முன்னர் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றுள்ளதாகவும், அந்தக் காலப்பகுதியில் குறித்த துப்பாக்கியை திருடியிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ஜ-4)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு வழங்கும்

# உயிர்ப் பல்வகைமையின் பாதுகாப்பிற்காக இளைஞர்கள்

உயிரியல் அமைப்புக ளில் மரபுவழிப் பண்பு, சிற் றினங்கள், சூழல் அமைப்பு போன்ற அனைத்து மட்டங் களிலும்பூமியில்வாழும்எண் ணிலடங்காத உயிரினங்க ளில் காணப்படும் வேறுபாடே உயிரியல்பல்வகைமை எனப படுகிறது. ஒரு சிறிய தீவாக இருந்த போதிலும், இல ங்கை சுற்றுச்சூழல் அமைப்பு களின் வளமான பன்முகத் தன்மையால் நிரம்பியுள் ளது.

இலங்கையின் பன்முகத் தன்மை வாய்ந்த நிலப்பர ப்பு, காலநிலை காரணிகள் மற்றும் கடலோர செல்வா க்கே இதற்கு காரணமாகும். இலங்கையின் பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகளை கடல் மற்றும் கடலோர சுற் றுச்சூழல் அமைப்பு, வன சுற்றுச்சூழல், புல்வெளிகள்



மற்றும் உள்நாட்டு ஈரநில ங்கள் என பரவலாக வகை ப்படுத்தலாம்.

இந்த சுற்றுச்சூழல் அமைப் புகளில் பெரும்பாலானவை அவற்றின் வளமான உயிர்ப் பல்வகைமை காரணமாக சர்வதேச அங்கீகாரத்தை யும் தற்போதைய பாதுகாப்பு நிலை காரணமாக சர்வ தேச அமைப்புகளின் கவ னத்தையும் பெற்றுள்ளன. சிங்கராஜ மற்றும் கண்ணெ லிய வனப் பிரதேசங்கள் இவற்றுள் சில. இலங்கை யில் உள்ள 83 ஈரநில தளங் களில் 41 ஈரநிலப்பரப்புகள் ஆசிய அடைவில் சேர்க்க ப்பட்டுள்ளன.

இலங்கையைச் சுற்றியு ள்ள இந்தியப் பெருங்கட லின் கரையோர நீர், கடல் மீன்பிடி பொருளாதாரம் சார்ந்துள்ள ரீஃப் சுறாக்கள் (**Reef shark**) மட்டி, இறால் (**Shrimps**) போன்ற மீன்கள் மற்றும் உணவுக்காக உட் கொள்ளும் பல பெரிய மீன்க ளின் வாழ்விடமாக அமை கிறது. கூடுதலாக, சுமார் 38 வகையான கடல் பாலூட்டி களும் உள்ளன. இதில் உள் நாட்டில் அழிந்து வரும் துகோங் (**Dugong**) இனங் கள், 37 செட்டேசியன்கள் (**Cetacean**), விந்து திமிங்க லங்கள் (**sperm whale**), நீல திமிங்கலங்கள் (**Blue whale**), 20 வகையான டொல் பின்கள் (**Dolphin**) அடங்கு கின்றன.

சதுப்பு மற்றும் உப்பு சது ப்பு நிலங்களில் அதிக உப்பு மண்ணில் வளரக்கூடிய தாவ ரங்கள் உள்ளன. இந்த சுற் றுச்சூழல் அமைப்புகள் துடு ப்பு மீன், மட்டி, கிளாம்கள் (**Clams**), நண்டுகள் (**Crabs**), சிப்பிகள் மற்றும் இறால்க ளுக்கான வாழ்விடமாகும். அவை பல மீன்களுக்கு நர்சரி தளத்தையும் (**Nursery ground**), பறவைகளுக்கான ஓய்வு தளங்களையும் வழங் குகின்றன.

இலங்கையின் வனப் பகுதிகளில், எமது நாட்டிற்கே உரித்தான பல தாவர மற்றும் விலங்கினங்கள் காணப் படுகின்றன. சிறுத்தை, ஆசிய யானை, உள்ளூர் அணில் வகைகள் போன்ற எமது நாட்டிற்கே உரித்தான விலங்குகளுக்கும் காட்டுப் பன்றிகள் மற்றும் புள்ளி மான்கள் போன்ற பிற விலங் குகளுக்கும் வாழ்விடமாக இவ் வனப்பகுதிகள் அமைகி ன்றன.

இலங்கைக்கே உரித் தான தாவரங்களில் 927 இனங்கள் அல்லது 28சத வீதமானவை பூக்கும் செடி கள் ஆகும். அவற்றில் 60 வீதமானவை ஈரமான, தாழ் நில மண்டலத்திலும், 34 வீதமானவை மொண்டேன் மண்டலம் மற்றும் அலை சார்ந்த சுற்றுச்சூழலிலும் காண ப்படுகின்றன.

இது எம்நாட்டில்காணப்படும் தாவர வகைகளில் சுமார் 60-75 சதவீதமாகும். ஃபேரன்ஃ பன்னம் வகைகளில் 59 இன ங்களும், பாசி வகைகளில் 11சதவீதமானவையும் இலங் கைக்கு உரித்தானவை. மேற் குறிப்பிட்ட தாவரங்களில் வகைகள் பெரும்பாலும் மழைக்காடுகளில் மாத்திரம் காணப்படுகின்றன.


இலங்கையில் காணப் படும் முதுகெலும்புள்ள விலங் கினங்களில் 30% (~930 இன வகைகள்) வீதமானவை நம் நாட்டிற்கே உரித்தா னவை. இவற்றுள் நீரிலும் நிலத்திலும் வாழ்வனவற்றில் 85% வீதமானவையும் ஊர் வனவற்றில் 60% வீதமான வையும் நன்னீரில் வாழும் மீன்களில் 50% வீதமான வையும் அடங்கும்.

முதுகெலும்பற்ற உயிரி னங்களில் நன்னீரில் வாழும் நண்டுகளில் 90% வீதமா னவையும் நத்தைகளில் 83% வீதமானவையும் தும்பி வகைகளில் 47% வீதமான வையும் பட்டாம்பூச்சிகளில் 8% வீதமானவையும் அடங் கும். இலங்கைக்கே உரித் தான தாவர இனங்களைப் போலவே, பெரும்பாலான விலங்கினங்கள் கூட இலங் கையின் ஈரமான மண்டல சுற்றுச்சூழல் அமைப்புகளு க்கு மட்டுப்படுத்தப்பட்டுள் ளன.

கடந்த நூற்றாண்டில் கணக் கெடுப்பாத தாவரங்கள் மற் றும் விலங்குகள் பல. இவற் றுள் பல அழித்திருக்கலாம் அல்லது அழிவின் விளிம்பில் இருக்கலாம்.


தாவர வகை களில் 30 இற்கும் பெறப்பட்ட ஃபேரன் இனங்களும் 72 வகை வகையான பூக்கும் தாவரங் களும் அழிந்திருக்கக்கூடும் என சந்தேகிக்கப்படுகிறது. அழிந்து போனதாக சந்தேகிக் கப்படும் விலங்குகளில் இலங் கைக்கு உரித்தான 21 நிலம் மற்றும் நீர் வாழிகளும் 13 பாம்பினங்களும் அடங்கு கின்றன.

'கவர்' மற்றும் 'கோம்ப் டக்' எனப்படும் விலங்குகள் வர லாற்றுக் காலத்தில் அழிந்து போன இலங்கை வாழ் உயிரி னங்களாகும். பல சமூகநல ஆய்வாளர்கள் மற்றும் இய ற்கை பாதுகாப்பு அமைப் புகள் இந்த பகுதிகளின் வள ங்களை வீண்விரயம் செய் யும் தொழில்களில் மீதும் மாசுபடுத்தும் நடவடிக்கை கள் மீதும் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றன.



எனினும், இவ்வாறான சேதமூட்டும் பல செயற்பாடு கள் மற்றும் தொழில் முயற் சிகள் இன்னமும் முன்னெ டுக்கப்படுகின்றது என்பது கவலைக்குரிய விடயமா கும். மேற்குறிப்பிட்டுள்ள விட யங்கள் இவ்வாறான பல் லுயிர் நிறைந்த பகுதிகளை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்து கின்றன. இவை மனிதர்கள் உட்பட பல உயிரினங்களின் வாழ்க்கையை பாதிக்கும்.

ஒரு சமுதாயத்தின் சுறு சுறுப்புமிக்க சக்தி வாய்ந்த அங்கம் இளைஞர்களே



ஆவர். வனஜீவராசிகள் மற் றும் இயற்கை பாதுகாப்புச் சங்கத்தின் இளைஞர் அணி யின் (**WNPS Youth Wings**) முக்கிய குறிக்கோள், முடிந்த வரை இளைஞர் உறுப்பி னரை ஈடுபடுத்தி இலங்கை யின் இயற்கை வளங்களை யும் உயிர்ப் பல்வகைமை யையும் பாதுகாக்கும் பொரு ட்டு ஏற்பட்டுள்ள இந்த சூழ் நிலையை எதிர்கால தலை முறையினரின் கவனத்திற்கு கொண்டு வந்து, இச்சூழ் நிலையில் ஒரு மாற்றத்தை உருவாக்கவும், அதன் மூலம் பெருகிவரும் சுற்றுச்சூழல் மாசுபாடை குறைக்கவும் சுற் றுச் சூழல் அமைப்புகளின தும் அதனை வாழ்விடமாகக் கொண்ட பல்லுயிரின் அழிவை தடுக்கவும் உதவுவதாகும்.

**WNPS** இன் இளைஞர் அணி இயற்கை பாதுகாப் பின் முக்கியத்துவத்தையும் எம் நாட்டின் பல்லுயிர் மற் றும் சுற்றுச்சூழல் அமைப்பு களுக்கு அழுத்தம் கொடுக் கும் ஆபத்தான செயற்பாடு கள் மற்றும் செயற்றிட்டங் கள் குறித்த விழிப்புணர் வையும் 'இயற்கை பாது காப்புக்கான விழிப்புணர் வும் கல்வியும்' எனும் தலை ப்பில் இலங்கையின் பல் வேறு மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளுடன் இணைந்து செயற்பட்டு வரு கிறது.

**WNPS** இன் இளைஞர் அணியின் அனைத்து திட் டங்களுக்கான நிதியுத வியை அளித்து **NDB** வங்கி தொடர்ந்தும் ஆதரவளித்து வருகின்றது.

**Wildlife and Nature Protection Society (WNPS) இளைஞர் அணியின் விழிப்புணர்வு திட்டம்-2019 வட மாகாணம்.**

# காடழிப்பை கண்காணிக்க விமானப்படை

(கொழும்பு)

**காடழிப்பு நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு விமானப்படை நிறுத்தப்படும் என பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.**



காடழிப்பைக் கட்டுப்படுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இராணுவம் மற்றும் பொலிஸ்துறைக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதன் காரணமாக இலங்கை விமானப் படை (SLAF) தங்கள் விமான சொத்துக்களைப் பயன்படுத்தி காடழிப்பை கண்காணிக்க நிறுத்தப்படும்.

இந் நிலையில், மாவட்ட செயலாளர்கள், அரசு முகவர்கள் விழிப்புடன் இருப்பதுடன், சுற்றுச்சூழல் அழிவுக்கு எதிராக நிற்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

அத்துடன், நில அபகரிப்பில் ஈடுபட்ட சந்தேக நபர்களை கைது செய்ய சிறப்புப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# வீதிகளில் கொள்வனவு; எதிராக நடவடிக்கை



(கொழும்பு)

வீதிகளில் சமிக்ஞை விளக்குகளுக்கு அருகில் வியாபாரிகளிடம் பொருட்களை கொள்வனவு செய்யும் சாரதிகள் தொடர்பில் மோட்டார் வாகன சட்டம் மற்றும் சாலைகள் சட்டத்தின் கீழும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாக கொரோனா வைரஸ் பரவும் அவதானம் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

நேற்றுக்காலை ஊடக நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் இதனைத் தெரிவித்தார். (ஜ-4)

# டுவிட்டரில் மீண்டும் வரும் 'ப்ளூ டிக்'

(கொழும்பு)

3 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் டுவிட்டரில் "ப்ளூ டிக்" வசதியை கொண்டுவர டுவிட்டர் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

சமூக வலைத்தளங்களில் ஒன்றான டுவிட்டரை இலங்கை உட்பட உலகம் முழுக்க உள்ள மக்கள் பலரும் பயன்படுத்தி வருகின்றனர். டுவிட்டரில் "ப்ளூ டிக்" எனப்படும் "சரிபார்க்கப்பட்ட கணக்கு" ஒரு கௌரவ விடயமாக பார்க்கப்படுகிறது.

இந்த "ப்ளூ டிக்" வசதி அரசியல் தலைவர்கள், சினிமா பிரபலங்கள், ஊடகத்தினர், எழுத்தாளர்கள் போன்றோருக்கு வழங்கப்பட்டு வந்தது. இதனால் இதில் பல சர்ச்சைகள் எழுந்தன.

பிரபலங்கள் என்பதற்கு என்ன அளவுகோல்? எதை அடிப்படையாக வைத்து "ப்ளூ டிக்" வசதி கொடுக்கப்படுகிறது? என பல்வேறு கேள்விகள் எழுந்தன. இதனால் கடந்த 2017 ஆம் ஆண்டு டுவிட்டர் நிறுவனம் "ப்ளூ டிக்" வசதியை நிறுத்தியது.

இந்த நிலையில் 3 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் "ப்ளூ டிக்" வசதியைக் கொண்டுவர டுவிட்டர் நிறுவனம் முடிவு செய்துள்ளது. அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இது மீண்டும் கொண்டு வரப்படும் என டுவிட்டர் நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஜ-4)

# முதன்முறையாக ட்ரோன் கமராவைப் பயன்படுத்தி திரவ கரிம உரங்கள் தெளிக்கும் சோதனை



(காலி)

நாட்டில் முதன் முறையாக, ட்ரோன் கமரா தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி திரவ கரிம உரங்கள் தெளிக்கும் சோதனை நேற்று முன்தினம் காலி ரத்கமாவின் பன்வில யாயாவில் நடத்தப்பட்டது.

இந்த தொழில்நுட்பத்தைப் பற்றி விவசாயிகளுக்கு அறிவுறுத்துவதற்கும் பரிசோதனை செய்வதற்கும் ட்ரோன் கமராவைப் பயன்படுத்தி திரவ கரிம உரங்கள் தெளித்தல் மேற்கொள்ளப்பட்டது. இந்த புதிய தொழில்நுட்பக் கருவியைப் பயன்படுத்தி பன்வில யாயாவில் சுமார் ஒன்றரை ஏக்கர் நெல் வயல்களில் கரிம நீர் உரங்கள் தெளிக்கப்பட்டன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் செழிப்பு பார்வை கொள்கை அறிக்கைக்கு ஏற்ப விவசாய சமூகத்திற்கு புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் விவசாயிகளிடையே கரிம உரங்களை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த பைலட் திட்டம் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

## தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ராஜாஜி

ஆங்கிலேய ஆட்சி இந்தியாவில் நடந்து கொண்டு இருந்த காலம். மூதறிஞர் ராஜாஜி சேலத்திலே சட்டத்தரணியாக தொழில் நடத்திக் கொண்டிருந்தார்.

அவர் ஒரு சமயம் தன்னிடம் வேலை செய்து கொண்டிருந்த பணியாளர் ஒருத்தரைக் கூப்பிட்டார். இதோ பாரப்பா...இந்த அஞ்சல் தலையை இந்த தபால் கவரிலே ஒட்டிக் கொண்டு வா என்று சொன்னார். அந்த ஆள் உடனே அந்த கவரையும் ஸ்ராம்ப்பையும் வாங்கிக் கொண்டு போனார். பசை தடவி ஸ்ராம்பை கவரிலே ஒட்டினார். திருப்பிக் கொண்டு வந்து ராஜாஜியிடம் கொடுத்தார். இவர் அதை வாங்கிப் பார்த்தார். உடனே சிரிக்க ஆரம்பித்துவிட்டார். அவராலே சிரிப்பை அடக்க முடியவில்லை.

அந்த பணியாளரைப் பார்த்து ஏம்பா நாங்கள் எல்லோரும் எவ்வளவோ பாடுபட்டு முயற்சி செய்து போராடிக் கொண்டு வருகின்றோம். ஆனால் எங்களாலே முடியவில்லை. எங்களாலே முடியாத அந்த காரியத்தை நீ ஒரு நிமிடத்திலே செய்து விட்டாயே என்று சொல்லிவிட்டு மறுபடியும் சிரித்தார். பணியாளருக்கு உடனடியாக ஒன்றும் புரியவில்லை. என்னென்று பார்த்தார். ராஜாஜி சொன்னார்.

ஆமாம்பா நீ ஒரு நிமிடத்திலே பிரிட்டிஷ் மன்னரை கவிழ்த்து விட்டியே என்றார். பின்பு தான் விபரம் புரிந்தது. அந்த பணியாளர் மன்னர் உருவம் இருந்த அந்த தபால் தலையை அந்த கவரிலே தலைகீழாக ஒட்டியிருந்தார். அதைப் பார்த்துவிட்டுத் தான் ராஜாஜி அப்படி சொன்னார். இந்த நகைச்சுவை உணர்வு அவருக்கு இயல்பாகவே இருந்தது.

சேலத்திலே வெங்கடசுப்பையர் என்று ஒரு பிரபலமான சட்டத்தரணி.அவரும் ராஜாஜியும் கருனூர்லே ஒரு பொதுக்கூட்டத்தை முடித்துக் கொண்டு திரும்ப ரயிலிலே சென்னைக்கு வந்து கொண்டிருந்தார்கள். இராத்திரி நேரம்.

வெங்கடசுப்பையர் ஜன்னல் ஓரமாக உட்கார்ந்து பயணம் செய்து கொண்டிருக்கின்றார். திடீர் என்று ஒரு இடத்திலே அவருடைய கைக் கடிகாரம் நழுவி ஜன்னல் வழியாக வெளியே விழுந்துவிட்டது. அவர் உயிருக்குயிராக பாதுகாத்து வைத்திருந்த வோட்ச் அது. ஏன் தெரியுமா? அவர் சட்டத்தரணியாக ஆகுவதற்கு முன்னோடி-சென்னை கிறிஸ்தவக் கல்லூரியிலே பணியாற்றிக் கொண்டிருந்தார். பணி முடிந்து விலகும் போது அவரிடம் படித்த மாணவர்கள் எல்லோரும் அன்புக்கு அடையாளமாக மிகவும் பிரியமாக கொடுத்த கைக் கடிகாரம் அது. அப்பேர்ப்பட்ட அன்புப் பரிசை திடீர் எனறு இழந்து விடுவதற்கு யாருக்குத் தான் மனசு வரும்.

ஐயையோ- வோட்ச் வெளியே விழுந்துவிட்டதே என்று பதற்றத்தோடு சத்தம் போட ஆரம்பித்தார். ராஜாஜி பக்கத்திலே தான் உட்கார்ந்திருந்தான். இருந்தாலும் இதைக் கேட்டுவிட்டு பதற்றப்படவில்லை. பதில் எதுவும் சொல்லவில்லை. அவர் பாட்டுக்கு என்னத்தையோ ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணிக் கொண்டே வந்தார்.

வெங்கட சுப்பையர் மிகவும் வேதனைப்பட்டார். என்னங்க இது? என்னுடைய அருமையான கைக்கடிகாரம் நழுவி வெளியிலே விழுந்துவிட்டது. அதற்கு நான் தவித்துக் கொண்டிருக்கின்றேன். நீங்கள் என்னென்றால் இதைக் கொஞ்சம் கூட காதிலே வாங்காமல் குழந்தை மாதிரி என்னத்தையோ எண்ணிக்கொண்டு வருகிறீர்கள். அடுத்த ஸ்டேஷனிலே வண்டி நின்றது. அப்படி ராஜாஜி பதில் ஒன்றும் பேசவில்லை. அவர் விடாமல் எண்ணிக்கொண்டு வந்தார். ராஜாஜி ஸ்டேஷன் மாஸ்டரை அழைத்தார். அவர் வந்ததும் அவரிடம் பேசினார்.

சேர் எங்களுக்கு ஓர் உதவி செய்ய வேண்டும். நாங்கள் வருகின்ற வழியில் என் நண்பருடைய வோட்ச் வெளியே விழுந்துவிட்டது. அது விழுந்த இடத்திலேயிருந்து தந்திக் கம்பங்களை விடாமல் எண்ணிக் கொண்டே வந்திருக்கின்றேன். இவ்வளவு கம்பங்களுக்கு பின்பே அது கிடக்கும். தயவு செய்து யாரையாவது அனுப்பி அதைத் தேட ஏற்பாடு செய்யுங்கள். அது கிடைத்து விட்டால் எங்களால் முடிந்த அன்பளிப்பைத் தருகின்றோம். அது கிடைத்து விட்டால் எங்களுக்கு ஒரு கடிதம் போடுங்கோ என்று சொல்லி முகவரியையும் கொடுத்தார். கொஞ்ச நாளிலே கடிகாரமும் வந்து சேர்ந்து விட்டது.

இதை எதற்குச் சொல்கின்றேன் என்றால் பதற்றம் அடையக் கூடிய நேரத்திலே கூட அறிவை சிதற விடாமல் செயற்படுத்துகின்ற சாமர்த்தியம் எல்லோருக்கும் சுலபமாக வந்து விடாது என்பதை எடுத்துச் செல்வதற்குத்தான். அவருடைய நகைச்சுவை உணர்வுக்கு இன்னொரு உதாரணம். ஒரு தடவை அவரைப் பார்க்க ஒரு நண்பர் வந்தார். என்னப்பா செய்து கொண்டிருக்கின்றாய்? என்று விசாரித்தார் ராஜாஜி.

இப்ப நான் நிறைய கதை-கட்டுரையெல்லாம் எழுதுகின்றேன். புத்தகம் போடுகின்றேன் என்றார் வந்தவர். அப்படியென்றால் சாப்பாட்டுக்கு என்ன செய்வது என்று கேட்டாராம் ராஜாஜி. இங்கே எழுத்தை நம்பி யாரும் காலம் தள்ள முடியாது என்பதை அவ்வளவு தெளிவாக அவர் புரிந்து வைத்திருக்கின்றார்.

# இலங்கைப் பாராளுமன்றம் எவ்வாறு தொழிற்படுகின்றது?

05

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஒப்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



● ஏதேனும் சாட்சி, குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது வேறெவரேனும் ஆள் சபையின் தடை எல்லைக்கு முன்னால் அழைக்கப்படும்போது அத்தகைய ஆளை சபையின் தடை எல்லைக்கு அழைத்துச் செல்ல படைக்கலச் சேவிதர் அதிகாரமளிக்கப்பட்டுள்ளார்.

● அமர்வுத் தினமொன்றில் பாராளுமன்ற வளாகத்தினுள் அல்லது கட்டடத்தினுள் ஒழுக்கமற்ற முறையில் நடந்துள்ளார் அல்லது கட்டடத்தினுள் சட்டவிரோதமாக நுழைந்துள்ளார் அல்லது குழப்பம் விளைவித்துள்ளார் அல்லது அடுத்தவர்களுக்கு அவ்வாறு செய்ய ஆதரவளித்துள்ளார் என்பதற்காக குற்றவாளியாக்கப்பட்டிருக்கும் எந்த ஆளையும் பிடியாணை இன்றி சபாநாயகரின் எழுத்துமூல அல்லது வாய்மூல கட்டளைக்கிணங்க கைது செய்வதற்கும் பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டம் மற்றும் நிலையியற் கட்டளைகளின் கீழ் பாராளுமன்றம் அவருக்கு தண்டனை வழங்கப்பட வேண்டுமா? இல்லையா? என தீர்மானிக்கும் வரையான அத்தகைய காலத்துக்கு பாதுகாப்பான தடுப்புக் காவலில் அவரை வைத்திருக்கவும் பண்டக்கலச் சேவிதருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

● கைது செய்யப்பட்ட அவ்வாறான ஆட்களைக் கையளித்தல் உட்பட சபாநாயகரால் வழங்கப்படும் கட்டளை மீதான செயன்முறைகளை படைக்கலச் சேவிதரே நிர்வகிக்கிறார்.

● சபையில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஒரு விடயத்தை எழுப்பும் பொழுது, எவ்விடயமாயினும் அதனை உடனடியாக கவனத்தில் கொள்ளுமாறு படைக்கலச் சேவிதர் பணிக்கப்படுவதுடன், அது மீதான நடுநிலையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கும் அவர் கட்டுப்படுகிறார்.

● உரிய முறையிலன்றி உடை அணிந்து சபைக்குள் நுழையும் எந்த பாராளுமன்ற உறுப்பினரையும் (அங்கீகரிக்கப்பட்ட உடை இல்லாதுவிடின்) உடனடியாக சபையில் இருந்து வெளியேறும்படி வேண்டுகோள் விடுப்பதற்கு படைக்கலச் சேவிதர் அதிகாரத்தைக் கொண்டுள்ளார்.

● தனது கடமைகளை செயற்படுத்துவதில் படைக்கலச் சேவிதர் சபையில் பிரதான கதவுக்கு அண்மையாக ஒரு விசேட இடத்தை பெற்றுக்கொள்கிறார்.

● படைக்கலச் சேவிதர் மாத்திரமே அவரது சம்பிரதாயஉடையின் ஒரு பாகமாகிய ஓர் ஆயுதத்தை (வாள்) சபைக்குள் எடுத்துச் செல்லக்கூடியவராக இருக்கிறார்.

● படைக்கலச் சேவிதர், பொது நலவாய பாராளுமன்றத்தின் படைக்கலச் சேவிதர் சங்கத்தின் ஓர் உறுப்பினராக இருப்பதுடன், பாராளுமன்ற



இத்தொப்பியானது, முதல் படைக்கலச் சேவிதரான எம்.இஸ்மாயில் என்பவரால் 1947 ஆம் ஆண்டிலிருந்து 1961 ஆம் ஆண்டு வரை வைபவ ரீதியான கொண்டாட்டங்களின் போது சீருடையின் ஒரு பகுதியாக அணியப்பட்டது.

முகாமைத்துவத்தின் நவீன விருத்திகளுடன் பழக்கப்படுத்திக்கொள்ளும் முகமாக அதன் அமர்வுகளுக்கு சமுகம

**உரிய முறையிலன்றி உடை அணிந்து சபைக்குள் நுழையும் எந்த பாராளுமன்ற உறுப்பினரையும் (அங்கீகரிக்கப்பட்ட உடை இல்லாதுவிடின்) உடனடியாக சபையில் இருந்து வெளியேறும்படி வேண்டுகோள் விடுப்பதற்கு படைக்கலச் சேவிதர் அதிகாரத்தைக் கொண்டுள்ளார். படைக்கலச் சேவிதர் மாத்திரமே அவரது சம்பிரதாய உடையின் ஒரு பாகமாகிய ஓர் ஆயுதத்தை (வாள்) சபைக்குள் எடுத்துச் செல்லக்கூடியவராக இருக்கிறார்.**

ளிக்கிறார்.

● சபையின் சிறப்புரிமைகளின் காவலனாக உள்ள சபாநாயகரால் வழங்கப்படும் கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு சட்டரீதியாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதான அமுல்படுத்துநராக படைக்கலச் சேவிதர் உள்ளார்.

● படைக்கலச் சேவிதரின் நியமனம் மற்றும் ஓய்வுபெறுகை என்பன சம்பிரதாயமாக பாராளுமன்றத்தில் அறிவிக்கப்படுகிறது. சேவைநலன் பாராட்டுவதற்கான பிரேரணைக்காக திகதி ஒதுக்கப்படுவதுடன், அது சபையில் படைக்கலச் சேவிதர் ஓய்வுபெறும் காலத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

● படைக்கலச் சேவிதரின் திணைக்களமானது பாராளுமன்றத்தில் மிக முக்கிய திணைக்களங்களுள் ஒன்றாக இருப்பதுடன், இது இரண்டாவது மிகப் பழைய திணைக்களமாக இருக்க, முதலாவதாக பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அலுவலகம் உள்ளது.

● படைக்கலச் சேவிதரின் தற்போதைய கடமைகளை பெரும்பாலும் சபை அலுவல்களின் மத்தியில் நிர்வாகம் சார்ந்ததாக விபரிக்க முடியும்.

● சபையின் சாதாரண அமர்வுத் தினங்களின்பொழுது படைக்கலச் சேவிதர் வெள்ளை நிற சீருடையை அணிந்திருப்பதுடன், சம்பிரதாய வைபவங்களின்போது விசேடமாக வடிவமைக்கப்பட்ட கறுப்பு நிற வைபவ ரீதியான உடையில் இருப்பார். (இராணுவ மேஜர்

**பாராளுமன்றத்தில் (சபையின்) சாதாரண அமர்வுத் தினங்களின்பொழுது படைக்கலச் சேவிதர் வெள்ளை நிற சீருடையை அணிந்திருப்பதுடன், சம்பிரதாய வைபவங்களின் போது விசேடமாக வடிவமைக்கப்பட்ட கறுப்பு நிற வைபவ ரீதியான உடையில் இருப்பார். (இராணுவ மேஜர் ஜெனரல் தரத்திற்கு சமமானது.)**

ஜெனரல் தரத்திற்கு சமமானது.)

● படைக்கலச் சேவிதரின் தொழிற்பாடுகளுள் உள்ளடங்குவனவாக வைபவங்கள், சபை, பாதுகாப்பு, வருகை தருநர்கள் நிர்வாகம், தங்குமிடம், திணைக்கள ரீதியானவை என்பன உள்ளடங்குகின்றன.

● தற்போதைய படைக்கலச் சேவிதர் நரேந்திர பெர்னாந்து ஆவார். இந்தப் பதவியுடன் தொடர்பான கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கு பிரதிப் படைக்கலச் சேவிதர் குஷான் ஜயரத்ன உதவியளிக்கின்றார்.

சபாநாயகர் சபைக்கு வருகை



● அமர்வு தினத்தின் ஆரம்பத்தின் போது சபைக்கு நுழைகையில் செங்கோலுடன் சபாநாயகருடன் சமுகமளித்தல்.

● முழுச்சபையும் ஒரு குழுவாக இருக்கையில் அல்லது சபையில் சபை அமர்வு இடம்பெறும்போது முழுநேரமும் சபைக்கூடத்தில் பிரசன்னமாக இருத்தல்.

● இருக்கை அமர்வுத் திட்டத் தயாரிப்புடனும் சபாநாயகரின் அங்கீகாரத்துடனும் பாராளுமன்றத்தின் சபையில் பாராளுமன்ற உறுப்பினர்களின் இருக்கைகளை ஒதுக்குதல்.

● சபையின் பார்வையாளர் இருக்கை மற்றும் நுழைவு மண்டபம் என்பவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்தலும் ஒழுங்கைப் பேணுதலும்.

● பிரதான குழு கூடும் அறையில் அல்லது எந்தப் பகுதியிலும் அல்லது பார்வையாளர் பகுதியில் குழப்பத்தை ஏற்படுத்தும் சபை அல்லது பிரதான குழுக்கூட்டம் இடம்பெறும் அதேவேளையில் வெளியேறுவதற்கு புறத்தோர் பணிக்கப்பட்ட போது அவ்வாறு வெளியேறாத ஆட்களையும் வெளியேற்றுதல்.

● பாராளுமன்ற சேவைகள் உதவியாளர்களை வழங்குவதன் மூலம் சபைக்கூட ஆதரவுச்சேவைகள்.

● சபையின் ஒவ்வொரு அமர்வு தினங்களிலும் பாராளுமன்ற உறுப்பினர்களின் வருகையை பதிவுசெய்தல், உறுதிப்படுத்தல்.

● பாராளுமன்ற உறுப்பினர்களின் மூப்பு நிரலைத் தயாரித்தல்.


### படைக்கலச் சேவிதரின் வைபவரீதியான பொறுப்பு

பாராளுமன்றம் மற்றும் சபாநாயகரின் வைபவரீதியான நிகழ்வுகள்/செயற்பாடுகள் ஆகியவற்றை பொருத்தமான தராதரத்துக்கு அமைய ஒழுங்கு செய்தல். (அரச மரியாதையுடனான இறுதிச் சடங்குகளின்போது பார்வைக்கு வைத்திருத்தல் தொடர்பான செயற்பாடுகள் உள்ளடங்கலாக)

● மரபொழுங்கு விடயங்கள் தொடர்பில் சபாநாயகருக்கும் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கும் மதியுரை வழங்குதல்.

● பதவிநிலையின் வைபவ ரீதியான கடமைகளின் செயலாற்றுகையில் அதி முக்கியத்துவமான அம்சமாக உள்ள செங்கோலின் காவலனாய் இருத்தல்.

● சபாநாயகருக்காகவும் சபைக்காகவும் வைபவ ரீதியான நிகழ்வுகளையும் நிகழ்ச்சிகளையும் உருவாக்குதலும் விருத்தி செய்தலும் நிறைவேற்றுதலும் (தொடரும்..)



# குற்றவியல் பொறுப்பதிகாரி திடீர் மரணம்

(கொழும்பு)

கொழும்பு கொள்ளுப்பிட்டி பொலிஸ் பிரிவுக்கான குற்றவியல் பொறுப்பதிகாரி நேற்றுக் காலை திடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் காலிமுகத் திடலில் இடம்பெற்றுள்ளது.

உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோதே குறித்த மரணம் சம்பவித்துள்ளது.

இருப்பினும் மரணத்திற்கான காரணம் உடனடியாக வெளியிடப்படவில்லை.

மேல் மாகாணத்தில் கொரோனாத் தாக்கம் மிக அதிக அளவில் காணப்பட்டுவரும் நிலையில் அவருக்கு பி.சி.ஆர்.பரிசோதனையும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# பாடசாலை ஆசிரியரின் உறவினர்களுக்கு கொரோனா

## மாணவர்கள் சுயதனிமைப்படுத்தல்

(கொழும்பு)

பாடசாலை ஆசிரியர் ஒருவரின் உறவினர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஹிக்கடுவ, சீனிகம, ஸ்ரீவிமலபுத்தி மகா வித்தியாலயத்தில் கற்பிக்கும் ஆசிரியரின் குடும்ப உறுப்பினர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.


அம்பாலங்கொட பிரதேசத்தில் இருந்து வருகைதந்த ஆசிரியரின் உறவினர்களுக்கு கொரோனா தொற்றியமை பி.சி.ஆர்.பரிசோதனை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குறித்த ஆசிரியருடன் தொடர்பில் இருந்த 3 ஆசிரியர்களும் 9 மாணவர்களும் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஹிக்கடுவ பொதுச்சுகாதார பரிசோதகர்கள் அந்த பாடசாலைக்கு கிருமி நீக்கம் செய்யும் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளனர். (ஐ-4)

# ஆலய வழிபாடு

## ஏன் – எதற்கு – எப்படி



## கருவறை வழிபாடு

(தொடர்ச்சி)

**குறிகளும் அடையாளமும் கோயிலும்**
**நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்**
**அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்**
**பொறியிலீர் மனம் என் சொல் புகாததே**

என்று திருநாவுக்கரசர் பாடி உள்ளார். எனவே ஆலய கருவறையில் உள்ள மூலவர் விக்கிரகங்களை வழிபடும் நாம் அதைக் கல் என்ற நினையாமல் அதன் நுட்பங்களையும் திட்பங்களையும் முயன்று அறிந்தோ அல்லது பிறரிடம் கேட்டு தெரிந்தோ நம் கடவுள்களின் புனிதத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

வீட்டில் கடவுளை பூஜிப்பதற்கும் கோவிலுக்குச் சென்று வழிபடுவதற்கும் உள்ள வித்தியாசம் இதில்தான் அடங்கியுள்ளது. இந்த உலகம் முழுக்க இறை சக்தி நிரம்பி இருந்தாலும் வெளியில் கடவுளை வணங்கினால் வினைகள் வெதும்பும். ஆனால் கருவறை மூலவரிடம் வழிபட்டால் வினைகள் பொசுங்கும்.

கார் ஓட்ட பயிற்சி பெறும்போது முதலில் சற்று தடுமாற்றமாகத்தான் இருக்கும். பிறகு பழகி விட்டால் கார் ஓட்டுவது சுலபமாகி விடும். கருவறை மூலவரிடம் நம் மனதையும் ஆத்மாவையும் இத்தகைய பயிற்சி மாதிரிதான் செய்து ஒடுங்கச் செய்ய முடியும்.

பொதுவாக கோவிலுக்குச் சென்று வழிபடும் போது உத்தம நமஸ்காரம் (ஒரு நொடியாவது மனதை ஒருமுகப்படுத்துவது), அஷ்டாங்க நமஸ்காரம் (உடலின் 8 அங்கங்களும் தரையில் படும்படி வணங்குவது), பஞ்சாங்க நமஸ்காரம் (உடலின் 5 அங்கங்கள் தரையில் படும்படி வணங்குவது) ஆகிய மூன்று முறைகளில் வழிபடலாம் என்று ஆகம விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் கருவறை முன்பு வழிபடக் கூடிய உத்தம நமஸ்காரம் முக்கியமானது. அர்ச்சுனன் தினமும் கூடை கூடையாகப் பூக்களைக் கொட்டி இறைவழிபாடு செய்தான். ஆனால் பீமனோ இரண்டே இரண்டு பூக்களை எடுத்துப் போட்டு சாமி கும்பிட்டான்.

இதில் மனதில் கர்வமோ இல்லாத பீமன் வழிபாட்டையே கடவுள் ஏற்றுக் கொண்டார். இது மகாபாரதம் காட்டும் பிரார்த்தனை கோட்பாடு.

இதையே நாமும் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும். பீமன் போன்று மனதில் எந்தக் கர்வமும் தலைக்கனமும் இல்லாமல் கடவுளை வழிபடும் போது உடம்பும் மனமும் ஒரே நேர் கோட்டில் புவியீர்ப்பு நிலையில் நின்று காந்த சக்தியை பெற முடியும். இரு கரம் கூப்பி தலை குனிந்து வணங்கும்போது தலைக்கு செல்லும் இரத்த ஓட்டம் சீர்படுவதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இப்படி தலையை மட்டும் குனிந்து வழிபடுவதை ஏகாந்த நமஸ்காரம் என்பார்கள். மூலவருக்கு தீபாராதனை காட்டும் போது தலைக்கு மேல் கையைத் தூக்கி வழிபடுதல் சேண்டும். இதற்கு “திரியங்க நமஸ்காரம்” என்று பெயர்.

இந்த வழிபாடுகளின்போது நம்முள் ஏற்படும் காந்த அலைகளே கர்ப்பக்கிரகத்தில் குடி கொண்டிருக்கும் மூலவர் விக்கிரகங்களை அடைந்து உங்கள் உணர்வுகளை வெற்றி பெறச் செய்கிறது. அதற்காகத்தான் கருவறையில் ஆகம விதிப்படி 16 வகை உபசாரங்களை மூலவருக்கு செய்வார்கள். அதை சோடசோபசாரபூஜை என்பார்கள்.

இறைவனுக்கு செய்யப்படும் இந்தப் பூஜை முறைகளை ஒவ்வொன்றாக அடுத்து வரும் பக்கங்களில் பார்க்கலாம். (முற்றும்)

# செய்தித்துளிகள்

## 72 பேர் கைது

(கொழும்பு)

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த காலப்பகுதியில் 72 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்கண்ட குற்றச்சாட்டுக்காக ஒக்டோபர் 30 முதல் நேற்று வரையான காலப்பகுதியில் மொத்தமாக 660 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நாட்டின் அனைத்து குடிமக்களும் மேற்கண்ட சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுவது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதற்கமைய தொழிற்சாலைகள், நிறுவனங்கள் மற்றும் சேவைகளை வழங்கும் ஏனைய அனைத்து இடங்களிலும் சுகாதார அதிகாரிகள் வெளியிட்ட வர்த்தமானி அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களை புறக்கணித்ததாகக் கண்டறியப்பட்ட எந்தவொரு ஸ்தாபனத்தின் நிர்வாகத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

## 116 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொவிட்-19 பரவல் காரணமாக மூன்று மத்திய கிழக்கு நாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 116 இலங்கையர்கள் நேற்று நாட்டை வந்தடைந்தனர்.

அதன்படி ஐக்கிய அரபு எமிரேட்ஸின் அபுதாபியிலிருந்து 42 பேரும் கட்டார், டோஹாவிலிருந்து 39 பேரும் ஓமான், மஸ்கட்டிலிருந்து 35 பேரும் நாட்டை வந்தடைந்தனர்.

இவ்வாறு விமான நிலையத்தை வந்தடைந்த அனைத்து பயணிகளும் பி.சி.ஆர்.பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதுடன், தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர். (ஐ-4)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 240 | 240 |
| உருளைக்கிழங்கு | 160 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 280 | 300 |
| தக்காளி | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 60 |
| கோவா | 30 | 70 | 80 |
| கரட் | 120 | 200 | 200 |
| பூசணி | 80 | 60 | 80 |
| புடோல் | 80 | 70 | 120 |
| வாழைக்காய் | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 280-320 | 320 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 200 |
| பாகற்காய் | 300 | 300 | 260 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 120 |
| பயற்றங்காய் | 200 | 200 | 240 |
| லீக்ஸ் | 80 | 100 | 80 |
| பீற்றூட் | 60 | 80 | 100 |
| கறிமிளகாய் | 280 | 240 | 240 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 200 |
| போஞ்சி | 200 | 240 | 280 |
| கத்தரிதம்புள்ள | 180 | 240 | 240 |
| கீரை - 1 பிடி | 50 | 60-70 | 80 |
| தேசிக்காய் | 200 | 180 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 220 | 300 |
| வெங்காயப்பூ | -- | -- | -- |
| முள்ளங்கி | 60 | 60 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | -- | 120 |



# சிறுவர் அரங்கம்

## முயற்சி வேண்டும்



ஒருநாள் தன் தோட்டத்தில் விளைந்த காய்கறிகளைப் பறித்து மூட்டைக் கட்டி மாட்டு வண்டியில் ஏற்றிக் கொண்டு அவற்றை விற்க நகரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

அப்போது, சாலையின் ஒரு திருப்பத்தில் வண்டியின் ஒரு சக்கரம் பள்ளத்தில் போய் விழ, வண்டி சாய்ந்து விட்டது.

"கடவுளே! இது என்ன சோதனை? எனக்கு உதவி செய்!" என்று அவன் மனமுருக வேண்டினான். கடவுள் உதவிக்கு வரவில்லை.

இரண்டாம் முறை, மூன்றாம் முறையென பல முறை கடவுளை உதவிக்கு அழைத்தும், அவர் வரவில்லை. வேறு யாரும் உதவிக்கு வரவில்லை.

கடைசியில், பள்ளத்தில் விழுந்திருந்த சக்கரத்தைத் தானே தூக்கி சாலையில் நகர்த்தி வைக்க முயற்சி செய்தான். என்ன ஆச்சரியம்? தனியாக தன்னால் தூக்க முடியாது என்று அவன் நினைத்திருக்க, எளிதாக சக்கரம் பள்ளத்திலிருந்து எழுந்து விட்டது.

அப்போதுதான், அவன் தன் பின்னால் நின்று கொண்டிருந்த ஒரு வழிப்போக்கன் சக்கரத்தைத் தூக்குவதில் உதவி செய்தது தெரிய வந்தது.

அவனை வணங்கியவன் "மிகவும் நன்றி ஐயா! கடவுள் செய்யாத உதவியை நீ செய்து விட்டாய்" என்றான்.

"கடவுளே! உதவி செய்!" என்று சொல்லியபடி கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தால், கடவுள் எப்படி உதவி செய்வார்? நீயே முயற்சி செய்தால்தான், கடவுள் உனக்கு உதவி செய்வார். அதற்கு நீதான் அவருக்கு, ஒரு வாய்ப்பு தர வேண்டும்!" என்று கூறிவிட்டு அந்த ஆள் தன் வழியே நடந்தான்.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## முதல் வெற்றி

37



பசானியஸ்

மாசிடோனியா நகரமே விழாக்கோலத்தில் ஜொலி ஜொலித்துக் கொண்டிருந்தது.

அந்தத் திருமணத்திற்கு பஸானியஸ் என்பவரும் வந்திருந்தார். மன்னர் பிலிப்பின் நெருங்கிய நண்பர். சில ஆண்டுகளுக்கு முன்னர் ஒலிம்பியஸால் அவமானப்படுத்தப்பட்டு மன்னர் பிலிப்பிடம் இருந்து ஒதுங்கியிருந்தவர்.

பழைய சம்பவத்திற்கு இந்த விழாவில் வைத்து நியாயம் கேட் டுவிடுவது என்பதுதான் பஸானியஸின் திட்டம். ஒரு வேளை தக்க நியாயம் கிடைக்காவிட்டால் பிலிப்பைப் பழிவாங்கி விடுவது என்றும் முடிவு செய்திருந்தார்.

மன்னர் பிலிப் மண் டபத்துக்குள் நுழைந்தார். எல்லோரையும் முகம் மலர வரவேற்றார். அப்போது ஒரு கணீர்க் குரல் அவருக்குப் பின்னால் கேட்டது. எங்கே போகிறாய் பிலிப். எனக்குப் பதில் சொல்லி விட்டுப்போ.

குரல் வந்த திசையை நோக்கித் திரும்பிப் பார்த்தார். பஸானியஸ் மன்னர் பிலிப்பின் முகம் சுருங்கியது. அடடே என்ன விடயம் பஸானியஸ்.

உன் மனைவியும் உறவினர்களும் என்னை அவமானப்படுத்தினார்கள் அல்லவா. அதற்கு இப்போது பிராயச்சித்தம் வேண்டும். ஏற்கனவே செய்தாகி விட்டதே. புரியவில்லை. உன்னை உயிரோடு நடமாட விட்டிருப்பதுதான் தகுந்த பிராயச்சித்தம். இதுதான் உன்னுடைய முடிவு என்றால் தலைதான் இதற்குப் பதில்.

ஆக்ரோஷமாகச் சொல்லி விட்டு தன்னுடைய கோடரியை உருவினான் பஸானியஸ். அடுத்த நொடி பிலிப்பின் மார்பு துளைக்கப் பட்டது. வாழைக்குலை போல சரிந்துவிழுந்தது பிலிப்பின் உடல். ஆம், உயிர் போய் விட்டால் மன்னராக இருந்தாலும் அப்படித்தானே சொல்ல வேண்டும்.

கண்ணிமைக்க நினைப்பதற்கும் இமைப்பதற்கும் இடைப்பட்ட நேரத்தில் எல்லாம் முடிந்துவிட்டது. விடயம் கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு குதிரையில் பாய்ந்துவந்தார் அலெக்சாண்டர்.

தரையில் இரத்த வெள்ளத்தில் பிலிப். ஓடிவந்து மடியில் ஏந்திக் கொண்டார். கத்தினார், கதறினார், துடித்தார். என்ன செய்வது. என்ன புண்ணியம்? போனது உயிராயிற்றே.

என்னை வரக்கூடாது என்று தடுத்துவிட்டீர்களே. நான் இங்கு இருந்திருந்தால் இந்தக் காரியம் நடந்திருக்குமா? அழுது புரண்டார். கண்களில் இருந்து வந்த நீர் பிலிப்பின் அங்கியையே நனைத்தது. கண்ணீர் அஞ்சலி.

மன்னர் பிலிப்புக்கு அடுத்தது யார்? சந்தேகமில்லாமல் இளவரசர் அலெக்சாண்டர் தான்.

அலெக்சாண்டர் அழைத்து வரப்பட்டார். பதவியேற்றுக் கொள்வதற்கு முன்னர் நடக்கும் கடவுள் பூஜைகள், சடங்குகள் எல்லாம் வரிசைக் கிரமமாக கொஞ்சம் தடல்புடலாகவே. ஒரு சுபமுகூர்த்த சுப தினத்தில் அலெக்சாண்டர் மாசிடோனிய மன்னராக மகுடம் சூட்டப்பட்டார். மாமன்னர் அலெக்சாண்டர் வாழ்க.

அலெக்சாண்டரின் தலை கிரீடத்தால் அலங்கரிக்கப்பட்டது. அரச பதவியை ஏற்றுக்கொண்ட பிறகு தான் தந்தை பிலிப்புக்கான இறுதிக் காரியங்களைச் செய்தார் அலெக்சாண்டர்.

**குர் ஆனில் உள்ள குறிப்பு**

துல்கர்னைன் என்றால் இரண்டு கொம்புடையவர் என்று அர்த்தம். பின்னாளில் அலெக்சாண்டர் உருவப்படும் பொறித்த நாணயத்தில் அவரை இரண்டு கொம்புகள் உடையவராகத் தான் காட்டினார்கள். கிழக்கு மேற்கு இரண்டு பகுதிகளுக்கும் அலெக்சாண்டரே அதிபதி என்பதைக் குறிப்பால் உணர்த்தியதே இந்த நாணயம்.

(தொடரும்)

உனக்கு அடி கிடைக்கும் போது பின்வாங்கவோ, மிரளவோ, அலறவோ செய்யாதே. மாறாக துணிவுடனும் சேர்வின்றியும் தலை நிமிர்ந்துகொண்டு இவ்வாறு கூறு: இதோ இன்னொரு படி முன் செல்ல அரிய வாய்ப்பு. - ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நினைவேந்தவும் உரிமையில்லா இனமோ நம் தமிழினம்!

இன்று மாவீரர் நாள். தமிழர் உரிமைக்காகக் குரல் கொடுத்த மாவீரர்களை நினைவு ஏந்துகின்ற நாள்.

எனினும் மாவீரர்களை நினைவேந்துவதற்கு நீதிமன்றங்கள் தடை விதித்துள்ளன.

இந்நிலையில் மாவீரர்களை வீடுகளில் நினைவேந்துமாறு தமிழ் அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. இஃது ஒரு தகவலுக்கானது.

இங்கு மாவீரர்கள் என்போர் யாவர்? என்பதை முதலில் பெரும்பான்மை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மாவீரர்கள் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் அல்லர். அவர்கள் இந்த நாட்டின் பிரஜைகள். எங்கள் பிள்ளைகள்.

அப்படியானால், ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய கட்டாயத்துக்கு அவர்களைக் கொண்டு வந்தது யார்? என்பதுதான் முதலில் எழுப்பப்பட வேண்டிய கேள்வி.

இலங்கையில் நீண்டநெடுங்காலமாக தமிழ் மக்கள் சிங்களப் பேரினவாதத்தால் நசுக்கப்படுகின்றனர்.

தமிழர்கள் சிறுபான்மை இனம் என்ற ஒரே காரணத்துக்காக இந்த நாட்டின் ஆட்சி அதிகாரத்தின் உச்ச பதவிகளில் தமிழர்கள் இடம் பெற முடியாது.

தவிர, பெரும்பான்மை சிங்கள ஆட்சியாளர்கள் விரும்பினால் மட்டுமே இந்த நாட்டில் தமிழ் மக்கள் வாழ முடியும் என்பதான நிலைமைகளும் உண்டு.

ஒவ்வொரு தடவையும் பேரினவாதம் கக்கிய இனவாதத் தீயில் எத்தனையோ ஆயிரம் தமிழ் மக்கள் கருகிப் போயினர்.

இத்தகைய நிலையிலேயே தமிழ் இளைஞர்கள் தங்கள் இனத்தின் - மக்களின் உரிமைக்காக, சுதந்திரத்துக்காக போராடினர். இதுவே உண்மை.

நடந்து முடிந்த ஆயுதப் போராட்டத்தில் தங்கள் உயிரை ஆகுதியாக்கிய மாவீரர்களை, தங்கள் பிள்ளைகளை தமிழ் மக்கள் நினைவு கூருகின்றனர்.

இந்த நினைவுகூரல் இந்த நாட்டின் தேசிய பாதுகாப்புக்கோ ஒற்றுமைக்கோ எந்தப் பங்கத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை.

மாறாக நினைவேந்தலுக்குத் தடை ஏற்படுத்தப்படுகின்றபோது மாவீரர்களை நினைவு கூருவதற்குக்கூட நம்மால் முடியவில்லை என்ற மனநிலை ஏற்படும்போது நாம் இன்னமும் அடிமைப்பட்ட இனமாக இருக்கின்றோம் என்பதையே சுட்டி நிற்கும்.

ஒரு மாவீரனின் தாய் தன் பிள்ளையை நினைவேந்த முடியவில்லை என்றால், அது அந்தத் தாயிடம் ஏற்படுத்தக்கூடிய பதகளிப்பு - உளத் தாக்கம் - மனவேதனை எத்துணை என்பதை அனைவரும் புரிந்து கொள்வது அவசியம்.

இத்தகைய புரிந்துணர்வு இருக்குமாயின் மாவீரர் நாளுக்கு சிங்கள மக்களும் மதிப்புச் செலுத்துவதாக இருந்திருக்க வேண்டும்.

இதனையே துட்டகைமுனு தமிழ் மன்னன் எல்லாளனுக்குச் செலுத்திய கௌரவம் சுட்டி நிற்கின்றது.

ஆனால் சமகாலச் சிங்களத் தரப்பின் மனநிலை வேறுவிதமாக இருப்பதுதான் இங்கு வேதனையிலும் வேதனை.

## யாழில் வாழைப்பழத்தின் விலையில் வீழ்ச்சி

(குப்பிழான்)

யாழில் பெய்த அடை மழை காரணமாக வாழைப்பழங்களின் விலைகள் சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளன.

யாழ். குடாநாட்டின் முக்கிய சந்தைகளில் ஒன்றான திருநெல்வேலிப் பொதுச் சந்தையில் நேற்று முன்தினம் புதன்கிழமையும், நேற்று வியாழக்கிழமையும் ஒரு கிலோ கதலி வாழைப்பழம் 35 ரூபாவாகவும், ஒரு கிலோ இதரை வாழைப்பழம் 40 ரூபாவாகவும் விற்பனையானது.

எனினும், அடை மழை காரணமாக வாழைப்பழங்களைக் கொள்வனவு செய்ய வருவோரின் எண்ணிக்கை வெகுவாகக் குறைவடைந்தமையால் திருநெல்வேலிச் சந்தையில் வாழைக் குலைகள் அதிகளவில் தேங்கியிருப்பதை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை, கொரோனாச் சுகாதார நடைமுறைகள் காரணமாகவும் ஆலயங்களில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் காரணமாகவும் வாழைப்பழக் கொள்வனவில் பெரும்வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் திருநெல்வேலிச் சந்தை வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (5-4-18)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

அச்சுவேலி கலாநிதி சனசமூக நிலையம் மற்றும் கோப்பாய் இளைஞர் கழக சம்மேளனம் இணைந்து நடத்தும் இரத்ததான முகாம் நாளை 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் அச்சுவேலி கலாநிதி சனசமூக நிலைய வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

அமரர்- இரத்தினம் தரணிகன் நினைவாக நடைபெறும் குறித்த இரத்ததான முகாமில் ஆர்வமுள்ள குருதிக் கொடையாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு உயிர் காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மேற்படி நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (5-4-18)

16 2020
பால்நிலை வன்முறைக்கு எதிரான 16 நாள் செயற்பாடு
16 Days of Activism Against Gender Based Violence- 2020
JSAC

வாழத்துடிக்கும் பெண்களுக்கு வாழ்வதற்கான உரிமையுண்டு. வையகத்தில் வாழவிடு சமூகமே! விழித்திடு சமூகமே!

யாழ்.சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center

ஊடக அனுசரணை: வலம்புரி

## மைதானத்திற்கான இடம் ஒதுக்கீடு

(கண்டாவளை)

வவுனியா, கொக்குவெளிப் பகுதியிலுள்ள இளைஞர்கள் தமது பகுதியில் விளையாட்டு மைதானம் இல்லை என வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபனின் கவனத்திற்குக் கொண்டு சென்றனர்.

இதனையடுத்து குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்திய மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் நேற்று கொக்குவெளி பிரதேசத்திற்கு சென்று அப்பகுதி இளைஞர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

அத்துடன் இளைஞர்களால் அடையாளப்படுத்தப்பட்ட அரச காணியைப் பெற்றுக் கொடுத்து குறித்த காணியை கரப்பந்தாட்ட மைதானத்திற்கு ஏற்றவகையிலும் புனரமைப்பதற்கான ஆரம்பப் பணிகளையும் ஆரம்பித்து வைத்தார்.

இதனால் இளைஞர்களின் நீண்டநாள் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்பட்டுள்ளது. (5-4-250)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

கள் கையில் படிந்திட்டாலும்
கடவுளைப் பூசித்தாலும்
சங்கையில் வந்த ஞான
சாத்திரம் உணர்ந்திட்டாலும்
மங்குல் போல் கோடி தானம்
வள்ளலாய் வழங்கிட்டாலும்
பொங்குறு புலால் புசிப்போன்
போய் நரகு (அ)டையவன் அன்றே!
-வள்ளலார்

உண்ணாமை உள்ளது உயர்நிலை
ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யாது அன்று
-குறள்

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2020

"ஒவ்வொருமரம் நடப்படும்போதும் சமாதானத்துக்கான விதை ஊன்றப்படுகிறது."
-வங்காரிமாதாய் (அமைதிக்கான நோபல் விருதுபெற்ற கென்யாவின் பசுமைப் போராளி)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** துணவி, சங்கரத்தை, சங்கானை, தொட்டிலடி, முள்ளியடி, நிச்சாமம், பிரான்பற்று, மண்டு மண்ணடை, இடும்பன், வைரவர் கோவிலடி (சுழிபுரம்) ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** வித்தியாபுரம், தண்டையார் மலை, முத்து விநாயகர்புரம், முத்தையன்கட்டு, கனகரட்ணபுரம், 13SLNG, முத்தையன் கட்டுகுளம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** புளிதறித்த புளியங்குளம், செக்கட்டிபிலவு, ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** வட்டங்கண்டல் குருவில், சிலாவத்துறையில் இருந்து முள்ளிக்குளம் வரை, சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை ஆகிய பிரதேசங் களிலும் மின்சாரம் தடைப்படும்.

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### வீட்டுப்பூசைக் குறிப்புகள்

வெற்றிலை நுனியில் லட்சுமியும், மத்தியில் சரஸ்வதியும், காம்பில் மூதேவியும் வாசம் செய்வதாக ஐதீகம். எனவே வெற்றிலைக் காம்பை கிள்ளிவிட்டு வெற்றிலையைக் கழுவிய பின் பூஜைக்கு வைக்க வேண்டும்.

வெற்றிலையின் நுனிப்பாகம் சுவாமிக்கு இடது புறம் வருமாறு வைக்க வேண்டும். அப்போது வெற்றிலையின் காம்புப் பகுதி சாமிக்கு வலதுபுறம் இருக்கும்.

சாமிக்கு படைக்கும்போது வாழை இலை போட்டு படைக்கிறோம். அப்படி வாழை இலை போடும் போது வாழை மரத்திலிருந்து நறுக்கப்பட்ட பகுதி சுவாமி படத்திற்கு வலது பக்கம் வர வேண்டும்.

பூஜை செய்யும்போது கடவுள் உருவங்களின் பாதங்கள் மற்றும் முகத்தைப் பூக்களால் மறைத்து விடக்கூடாது. முகமும், பாதமும் திறந்து நிலையில் இருக்க வேண்டும்.

செல்வத்திற்குரிய தெய்வங்களான வெங்கடாஜலபதி, லட்சுமி, குபேரன் ஆகியோர் படங்களை வீட்டின் வெளிப்புறம் பார்த்து இருக்குமாறு மாட்டக் கூடாது. (தொடரும்)

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

**FACULTY OF MEDICINE**

**01. Senior Professor/Professor of**
Anatomy/ Physiology/ Community & Family Medicine/ Pathology/ Microbiology/ Parasitology/ Forensic Medicine/ Pharmacology/ Medicine/ Psychiatry/ Obstetrics &Gynaecology/ Paediatrics / Surgery

**02. Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Unconfirmed) / Lecturer (Probationary) in** Anatomy/ Biochemistry/ Physiology/ Community & Family Medicine/ Pathology/ Microbiology/ Parasitology/ Forensic Medicine /Pharmacology/ Nuclear Medicine / Psychiatry/ Obstetrics &Gynaecology/ Paediatrics/ Surgery/ Medical Education

Note 1:

*I. Applications for the above posts will be entertained from the candidates with **MBBS degree** as their first degree*
*II. Applications from candidates with BDS/BVSc degree can also be considered for the posts in Biochemistry, if there is no applicant with MBBS degree*
*III. For the Posts of Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Unconfirmed)/ Lecturer (Probationary),preference will be given to those who either have or are doing **the postgraduate degree as given below against the subject:***

| | |
|---|---|
| i.Anatomy | - a) MD in Surgery/ Surgery with sub specialty/ Radiology<br>- b) M.Phil/M.Sc./Ph.D in Anatomy |
| ii.Biochemistry | - a)MD in General Medicine/Chemical Pathology/ Genetics/Clinical Genetics/Nutrition/Clinical Nutrition<br>- b)M.Phil/M.Sc./Ph.D in Biochemistry |
| iii.Physiology | - a) MD in General Medicine/ Anaesthesiology/ Endocrinology/ Paediatrics/ Obstetrics &Gynaecolgy/Surgery<br>- b) M.Phil/M.Sc./Ph.D in Physiology |
| iv.Community & Family Medicine | - MD in Community Medicine/Family Medicine./ Public Health<br>- Ph.D in Community Medicine/ Family Medicine |
| v.Pathology | - MD in Haematology/Histopathology |
| vi.Microbiology | - MD in Clinical Microbiology/Medical Microbiology/ Immunology |
| vii.Parasitology | - MD in Parasitology |
| viii.Forensic Medicine | - MD in Forensic Medicine |
| ix.Pharmacology | - a) MD in Clinical Pharmacology/ General Medicine/ Paedigtrics/ Anesthesiology<br>- b) Ph.D in Pharmacology/Clinical Pharmacology |
| xNuclear Medicine | - MD in Radiology<br>- Ph.D in Nuclear Medicine |
| xi.Psychiatry | - MD in Psychiatry/Psychiatry with sub specialty (Child Psychiatry/Geriatric Psychiatry/Addiction Psychiatry) |
| xii.Obstetrics &Gynaecology | - MD in Obstetrics &Gynaecology with Subspecialty training in Gynaecological Oncology |
| xiii.Paediatrics | - MD in Paediatrics/ Paediatrics with sub specialty (Neonatology/ Neurology) |
| xiv.Surgery | - MD in Orthopaedic Surgery/Radiology/ Anesthesiology |
| xv.Medical Education | - a) MD in Medical Education<br>- b) Ph.D in Medical Education |

The above academic posts carry very attractive remunerations and other benefits.
Those who wish to apply are strongly advised to visit our University Website www.jfn.ac.lk for all the relevant details.

**Closing date:**
Applications should reach us on or before the date given below:

**Post of Senior Professor/Professor - 29.01.2021**

**Other posts - 31.12.2020**

Application forms and other details will be available in the University website www.jfn.ac.lk. Applicants are requested to send the prescribed application form downloaded from the University website with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank Account No: **162-1-001-6-0000880** of Bursar, University of Jaffna.

The candidates who apply for **more than one** post should submit **separate application** along with separate **Bank slip**. The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Perfected applications and self evaluation with supportive documents for the **Post of Senior Professor/Professor** shall be sent to the **Vice-Chancellor, University of Jaffna, Sri Lanka** as required by the University Grants Commission Circulars No. 5/2015, 5/2015(i) (for Senior Professor), University Grants Commission Circulars 916, 4/2014 and Establishments Circular No. 4/2010 (for Professor), (see http://www.jfn.ac.lk/index.php/circular/) with a covering letter.

Perfected applications for the **other posts** shall be sent to the **Deputy Registrar/Academic Establishments, University of Jaffna**, **Sri Lanka** under registered post with the photocopies of statement of the Degrees and Service certificates. **Submission of Applications will not be entertained in person.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Applications and referees reports should be in the relevant format. Incomplete and Illegible applications and applications received after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.**
**26.11.2020**

(C-782)


# பாரிய இயற்கை அனர்த்தம் ஏற்படக்கூடிய அபாயம்

## எச்சரிக்கிறார் சமல் ராஜபக்ச


(கொழும்பு)

இலங்கையில் பாரியளவிலான இயற்கை அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக அமைச்சர் சமல் ராஜபக்ச நேற்று பாராளுமன்றில் குறிப்பிட்டுள்ளார்.

காலநிலை அனர்த்தம் அதிகளவில் காணப்படும் உலகின் முதல் பத்து நாடுகளில் இலங்கை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மொத்தமாக 180 நாடுகளைக்கொண்ட இந்த பட்டியலில் அதி உயர் ஆபத்து காணப்படும் நாடுகளின் வரிசையில் இலங்கை 6ஆம்இடத்தை வகிப்பதாகவும் தெரிவித்துள்ளார். (ம-3)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் வீதிகளெங்கும் கடுமையான பொலிஸ், இராணுவ கெடுபிடி



(பனிக்கன்குளம்)

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பகுதி எங்கும் இன்றைய தினம் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம் பெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்ற நிலையில் தற்போது நீதிமன்றங்களினால் குறித்த நினைவேந்தல் நிகழ்வுகளுக்கான தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்திலும் 6 பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளினால் செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய 46 பேருக்கு தடை உத்தரவுகள் வழங்கப்பட்டு மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை பொது வெளியில் செய்வதற்கு தடைவிதிக்கப்பட்டிருக்கிறது.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் பகுதிகள் எங்கும் இராணுவத்தினரின் பிரசன்னமும் பொலிஸாரின் பிரசன்னமும் அதிகரித்துக் காணப்படுகின்றமை மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளை செய்ய முற்படுகின்ற மாவீரர் துயிலும் இல்ல வளாகங்கள் மற்றும் வழமையான நினைவேந்தல் நிகழ்வுகள் இடம் பெறுகின்ற இடங்களில் ஆயுதம் தாங்கிய பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். முல்லைத்தீவு நகரப் பகுதி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் ஏற்கனவே இருந்த இராணுவ சோதனைச் சாவடிகளை விட விசேடமாக பொலிஸ் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

வழமையைவிட அண்மை நாட்களாக இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைகள் மற்றும் ரோந்து நடவடிக்கைகள் மோட்டார் சைக்கிள் பவனிகள் என மக்களை அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடுகள் ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் மக்கள் அச்ச உணர்வுடன் நடமாட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதான முல்லைத்தீவு நகர் பகுதிகளில் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளும் முல்லைத்தீவு கடற்கரையில் வழமையாக நினைவேந்தல் நிகழ்வு செய்யப்படுகின்ற நிலையில் கடற்கரையில் பொலிஸ் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டு பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர். நகர் பகுதிகளில் வீதிகளிலேயே இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கைகளும் சுமார் 10க்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களில் இராணுவத்தினர் வீதிகள் எங்கும் சென்று வருகின்ற நிலையில் மக்களை அச்சுறுத்தும்விதமாக செயற்பட்டு வருகின்றனர். (ம-3,281)

## பிரபாகரனுக்கு...

திட்டத்தின் எல் வலயத்தின் கீழ் வடபகுதி மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக சுட்டிக் காட்டிய அவர், அவ்வாறு சிங்கள அரசாங்கத்தினால் பாதிப்புக்கள் ஏற்படும் என்பதை முன்கூட்டியே அறிந்துதான் தலைவர் பிரபாகரன் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்ததாகவும் சுட்டிக் காட்டினார். (ம-3)

## மின்சாரம் தாக்கி...

நேற்று பிற்பகல் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

வவுனியா, செட்டிகுளம், காந்தி நகர் பகுதியில் வசிக்கும் இளைஞர் ஒருவர் தனது வீட்டிற்கு அருகில் இருந்த தோட்டத்துக்கு காட்டு விலங்குகளின் பாதுகாப்புக்காக மின்சாரம் பொருத்தியுள்ளார்.

இந்நிலையில் நேற்று மாலை தோட்டத்தில் குரங்குகள் நின்றமையால் அதை விரட்டிச் சென்றபோது தவறுதலாக தோட்ட வேலியில் இருந்த மின்சாரத்தில் அகப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு மரணமடைந்தவர் செட்டிகுளம், காந்தி நகர் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய ஜெராட் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் செட்டிகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3,250)

## மனித உணர்வு...

மாவீரர் நாள் என்பது மனித உணர்வுகளோடும் ஓர் தேசிய இனத்தின் பண்பாட்டோடும் அதன் பண்பாடு தழுவிய விழுமியங்களோடும் இணைத்து எங்கள் அகக் கண்களால் பார்க்கப்பட வேண்டிய புனித நாள் என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் நிகழ்த்திய உரையில், இலங்கைத் தீவிலும் உலகெங்கிலும் பரந்து வாழ்கின்ற தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நெருப்பாய் எரிந்து, அவர்களின் நெஞ்சைப் பிழிந்து தம் பிள்ளைகளின் நினைவுகளைச் சுமக்கும் மகத்தான நாளே மாவீரர் நாளாகும்.

தாய்மார்களது கண்ணீரையும், ஆற்றாமையையும் பயங்கரவாதம் என்று பச்சை குத்துவது பாராளுமன்றத்திற்கும் அதன் செங்கோல் தர்மத்திற்கும் ஏற்புடையதல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன் யுத்தம் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டபோதும் யுத்தத்திற்கான அடிப்படைக் காரணங்கள் இதுவரை களையப்படவில்லை.

அவை அனைத்தும் எரியும் பிரச்சினைகளாக இன்னும் எம்முன்னே எழுந்து நிற்கின்றன.

அவை பற்றி பேச முனைகிறபோதெல்லாம் எங்கள் குரல்வளைகள் மாத்திரமல்ல எம் இனத்தின் குரல்வளைகளே இறுக நெரிக்கப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## பருத்தித்துறை...

திருநெல்வேலி வானிலை ஆய்வு நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளின் மழை வீழ்ச்சி நிலைவரப்படி பருத்தித்துறையில் மீண்டும் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் திருநெல்வேலி வானிலை ஆய்வு நிலையப் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை காலை முதல் செவ்வாய்க்கிழமை காலை வரையான 24 மணித்தியாலத்தில் அதிகூடிய மழை வீழ்ச்சியாக பருத்தித்துறையில் 103.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ள நிலையிலேயே மீண்டும் மேற்படி பகுதியில் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. (ம-3,18)

## இந்திய தேசிய...

தரவுள்ளார்.

மாலைதீவு தரப்பில் இருந்து, மாலைதீவு பாதுகாப்பு அமைச்சர் மரியா அஹமட் தீதியும் இலங்கை சார்பில் உயர்மட்டப் பிரதிநிதிகளாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர்.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவாலின், இந்த வருடத்தில் இலங்கைக்கான இரண்டாவது விஜயம் இதுவாகும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் வெற்றியின் பின்னர், கடந்த ஜனவரி மாதம் அவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது, "கடன் பொறியை" எவ்வாறு எதிர்கொள்வது மற்றும் இராணுவ உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது. (ம-3)

## மாவீரர் தினத்தை...

துக் காணப்படுகின்றது. பல்வேறு பகுதிகளிலும் ஏற்கெனவே இருந்த இராணுவச் சோதனைச் சாவடிகளை விட விசேடமாக பொலிஸ் சோதனைச் சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அரச படைகளின் இந்தச் செயற்பாடுகளுக்கு எதிராகத் தமிழ் அரசியல்வாதிகள் கடும் கண்டனங்களை வெளியிட்டுள்ளனர்.

மாவீரர்களைப் பொதுவெளியில் நினைவுகூரத் தடை விதித்தாலும் தமிழ் மக்கள் தத்தமது வீடுகளில் இன்று மாலை 6.07 மணியளவில் ஈகைச்சுடர்களை ஏற்றி வீரமறவர்களை அஞ்சலிப்பார்கள் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-3)

## நினைவேந்...

முன்னெடுப்பதற்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்று தடை விதித்து கட்டளை பிறப்பித்துள்ளது.

நெல்லியடி, பருத்தித்துறை மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸார் நேற்று முன்தினம் தாக்கல் செய்த மனுக்களுக்கு அமைய நேற்று இந்த கட்டளை வழங்கப்பட்டுள்ளது. (ம-3,60)

## சதத்தை அண்மித்...

டில் கோவிட் - 19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 99ஆக அதிகரித்துள்ளது.

மினுவாங்கொட - பேலியகொட கொரோனா பரவல் கொத்தணியை அடுத்து கடந்த 8 வாரங்களில் 86 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் நாட்டில் நேற்றும் +553 பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 22 ஆயிரத்து 22 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## மாவீரர் நாள்...

தமிழ் மக்களின் உரிமைக்காகவும் விடியலுக்காகவும் அரசாங்கத்துடன் போரிட்டு உயிரிழந்த போராளிகளை நினைவுகூரும் இந்த நாளில், இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் அனைத்தும் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு பெரும் எடுப்பில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

பொதுவாக மாலை 6 மணி 5 நிமிடத்திற்கு அகவணக்கத்துடன் மாவீரர் தின அஞ்சலி நிகழ்வு ஆரம்பமாகும்.

எனினும் அந்த வாரம் முழுவதும் அதாவது 21ஆம் திகதி முதல் 27 வரை ஆங்காங்கே நினைவேந்தல்கள் இடம்பெறும்.

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து உயிர் நீத்த முதல் போராளி லெப்டினன்ட் சங்கர் என அழைக்கப்படும் சத்தியநாதன் வீரச் சாவடைந்த நவம்பர் 27ஆம் திகதியே மாவீரர் நாளாக பிரகடனப் படுத்தப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து உயிர் நீத்தவர்களின் உடல்கள் எந்த சந்தர்ப்பத்திலும் எதிர்த் தரப்பின் கைகளில் அகப்பட்டு விடக்கூடாது என்பதோடு, உயிர் நீத்தவர்களை முழுமையான இராணுவ மரியாதைகளுடன் புதைப்பதோடு, அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது' என புலிகள் அமைப்பு ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து ஒரு நடைமுறையை பேணி வந்தது.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் மாவீரர் நாளை கடைப்பிடிப்பதற்கு தாயகத்தில் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

எனினும் ராஜபக்ஷ அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னர் மாவீரர் நாளை அனுஷ்டிக்க கொரோனா மற்றும் பயங்கரவாத சட்டத்தை காரணம் காட்டி நீதிமன்றம் ஊடாக தடை விதித்துள்ளது.

எனினும் பொதுமக்கள் தத்தமது வீடுகளில் சுடரேற்றி அஞ்சலி செலுத்துமாறு தமிழ்க் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# மாங்குளத்தில் குண்டு வெடிப்பு

### எவருக்கும் சேதம் இல்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாங்குளம் கற்குவாரி பகுதியில் தனியார் ஒருவருடைய காணியில் இருந்து குண்டு ஒன்று நேற்று வெடித்துள்ளது.

தனியார் ஒருவருடைய காணியில் இருந்து குறித்த குண்டு எவ்வாறு வெடித்தது என்பது தொடர்பாக சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் இராணுவத்தினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,281)


மஹஜன சம்பத
திகதி 2020/11/26
சீட்டிழுப்பு இலக்கம் 4318
ஆங்கில எழுத்து X
வெல்லப்பட்ட இலக்கங்கள் 2 3 2 2 2 6

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 26-11-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2613
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 20 26 28 69

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1632
திகதி 2020/11/26
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 07 18 27 57

தன நிதானய
திகதி - 2020.11.26
சீட்டிழுப்பு இலக்கம் - 355
Z 05 21 79 80
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்

மெகா பவர்
திகதி 26/11/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0685
J 09 19 37 64 74

ஸம்வர்தன வாசனாவ
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 387
திகதி 26.11.2020
வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 37 55 60
விதி எண் 2
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,081,472
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி
ADA KOTIPATHI
கிழமை: வியாழன்
சீட்டிழுப்பு இல: 1114
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 26.11.2020
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 86,505,080
வெற்றி இலக்கங்கள் 24 29 48 65
ஆங்கில எழுத்து X
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
Shanida
கிழமை: வியாழன்
சீட்டிழுப்பு இல: 3444
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 26.11.2020
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 33,605,461
வெற்றி இலக்கங்கள் 02 14 47 50
ஆங்கில எழுத்து Z
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 36,73,282/=
திகதி : 26.11.2020
வெற்றி வாரம் : 2995
வர்ணம் : கபிலம்
வெற்றி இலக்கங்கள் 26 47 52 58
விருச்சிகம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 7,231,460

SUPER BALL
சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1288
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 26/11/2020
தினம் வியாழன்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
V 10 18 59 66
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
2,906,440
அபிவிருத்தி லொத்தர் சபை

## காணிகள் தேவை

யாழ்ப்பாணம்,
கோப்பாய், நல்லூர்
பிரதேச செயலக
எல்லைகளுக்குள்
20 பரப்பு தொடக்கம்
50 பரப்பு வரையான
காணி தேவை.
( தரகர் தேவையில்லை. )
(4774)

**076 221 2037**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# வவுனியா, யாழில் 23 பேருக்கு தொற்று

(குப்பிழான்)

நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 352 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அவர்களில் பெரியகட்டு வவுனியா தனிமைப்படுத்தல் முகாமைச் சேர்ந்த 20 பேருக்கும், தனிமைப்படுத்தலில் இருக்கின்ற யாழ்ப்பாணம் கடற்படையைச் சேர்ந்த மூன்று பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

ஏனையவர்களுக்குத் தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-03.18)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பலாலி றோட்,
கோண்டாவில் இருபாலை வீதியில்
பழனி ஆண்டவர் ஆலயம் அருகில்
15 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.
1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
ராச வீதிச் சந்தியில் இருந்து 50 M தூரம்.
( தரகர் தேவையில்லை. )
(4774)

**குரு : 077 468 3354**
**077 288 0152**

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.
(4758)

தொடர்பு: 076 835 1932,
021 223 2222 (உரும்பிராய்)

## கணினி திருத்தம்

கணினி, லப்டொப் சிறந்த
முறையில் திருத்தித் தரப்படும்.
(வீடுகளுக்கு வந்தும் திருத்திக் கொடுக்கப்படும். )
(4769)

**076 827 5129, 021 222 8797**

**PC Garage**
255B, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி **சுபாசினி இராஜேந்திரன்**
அவர்களின் அன்புத் தந்தை
அமரர்
**பொன்னையா**
**சண்முகநாதன்**
அவர்கள் இறைபதம் அடைந்த
செய்தி அறிந்து துயரடைவதுடன்
அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
(4768)

**அதிபர், ஆசிரியர்கள், கற்பித்தல் சாரா ஊழியர்கள்**
**யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை**


## உள்நாடு, வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை



DHL
உள்நாடு யாழ். - கொழு. கொழு. - யாழ். 12 மணித்தியாலங்களில் ஒப்படைக்கப்படும்
வெளிநாடு 3 - 5 நாட்களில் ஒப்படைக்கப்படும்
(நிபந்தனைக்குட்பட்டது.)

**Lanka Cargo Worldwide Express**
315, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(4770)
021 221 1995
076 283 2397

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK- 1025 /=Kg
0768226240

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-735)


## மரண அறிவித்தல்

தோற்றம்
11 – 11 – 1958



மறைவு
26 – 11 – 2020

### திருமதி சோதீஸ்வரி செல்வராஜன்

துன்னாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோதீஸ்வரி செல்வராஜன் நேற்று (26.11.2020) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஈஸ்வரபாதம் மற்றும் சந்திரவிம்பம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் - இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்வராஜனின் (ஐடியல் லொட்ஜ் உரிமையாளர் - கொழும்பு) பாசமிகு மனைவியும் சந்திரிக்கா ( NDB வங்கி ), அருண் (இந்தியா), Dr. யாதவன் (Jaffna Teaching Hospital ) ஆகியோரின் தாயாரும் துளசிராம் ( Lion Distributors - Chunnakam), பிரவீனா (ஆசிரியை - புங்குடுதீவு மகா வித்தியாலயம்) ஆகியோரின் மாமியாரும் ஆதித்தியா (St. John's College), ஆருத்திரா, தனுஷ்ரீ ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொக்குவில் மேற்கு, நீதிராஜா வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (27.11.2020) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
(4762)

நீதிராஜா வீதி,
கொக்குவில் மேற்கு.
076 652 9869
077 283 3242
தகவல்:-
மக்கள், மருமக்கள்


# NEW SCIENCE HALL
Kannathiddy Road , JAFFNA

# A/L CHEMISTRY
## 2021 DAY CLASS
# K.MYURRAN
## ZOOM CLASS

Monday , Tuesday
Wednesday ,
Thursday, Friday
9.30 a.m – 11.30 a.m

Saturday & Sunday 7.30 a.m – 9.15 a.m

Complete Theory Speed Revision , Past Paper
M.C.Q (1979 -2020) & Part – II (2011 – 2020)

**Model Exams & Discussions**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் மாணவர்கள் இணையமுடியும். நேரடி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னரும் வெளிமாவட்ட மாணவர்களுக்கு பொருத்தமான நேரத்தில் இறுதிப்பரீட்சை வரை zoom இல் வகுப்புகள் தொடர்ந்தும் நடைபெறும்.

Unit 01 - அணுக்கட்டமைப்பு
ஆரம்பம் : 02-12-2020 காலை 9.30 a.m
(C-779)

தொடர்புகளுக்கு: 076 569 3006


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.